# அண்ணல் வருவானா?

எஸ். முத்துமீரான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்ணல் வருவானா?

எஸ்.முத்துமீரான்

நேர் நிரை வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ANNAL VARUVANA**

S.MUTHUMEERAN ©

First Edition: 2008 December / Pages : 128 / Published by:
**Nehr Nirai** - D1/15, TNHB, South Sivan Koil Street,
Kodambakkam, Chennai-24 **nehrnirai@gmail.com**

**PRICE Rs. 250.00**

isbn : 978-81-903665-2-6

**அண்ணல் வருவானா?**

**எஸ்.முத்துமீரான்** ©

முதல்பதிப்பு:2008 டிசம்பர் / பக்கம்:128 / விலை : ரூ.60.00
நேர்நிரை வெளியீடு, டி.1/15, டி.என்.ஹச்.பி.,
தெற்கு சிவன் கோவில் தெரு, கோடம்பாக்கம், சென்னை-24
நூலழகு : தினா, கீதா

*All Rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system, or transmitted, in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise, without the prior written permission of the publisher.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

என் வாப்பா சிக்கந்தர்லெவ்வை சின்னத்தம்பி
உம்மா மீராசாகிபு மீரா உம்மா இருவருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதத்தினூடாக – மதங் கடந்து – மானுடம் தேடி

...............

## இன்குலாப்

நண்பர் திரு.முத்துமீரான் அவர்கள் நேரில் காணாமலே எனக்கு எழுத்துமூலம் அறிமுகமானவர். என் எழுத்துகளை அவர் படித்திருப்பாரா என்பதறியேன். ஆனால் அவரது நாட்டுப்புறப் பாடல்கள் தொகுப்புகள் எனக்குப் பழக்கமானவை. அவருடைய கருவாட்டுக் கஸ்ஸா என்ற தொகுப்புக்கு நான் ஒரு மதிப்புரையும் எழுதியுள்ளேன். இலங்கையின் கிழக்கு மாகாணத்தின் நாட்டுப்புற வழக்காற்றுப் பாடல்களைத் தமிழ் கூறும் நல்லுலகுக்கு அறிமுகப்படுத்தியதில் திரு முத்து மீரானுக்குப் பெரும்பங்கு உண்டு. சென்னை வரும் போது சந்தித்து உரையாடியதில் அவருடைய குழந்தை முகமும் மனமும் எனக்குப் பிடித்துப் போயின.

போரால் அலைக்கழிக்கப்படும் ஒரு மண்ணில், ஒரு சிறுபான்மைச் சமூகத்தின் கலைஞர் இவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருமுறை மட்டுமே எனக்கு வாய்த்த இலங்கைப் பயணத்தில், மட்டக்களப்புப் பகுதிக்கு நான் போய் வரமுடியவில்லை. எனினும் அந்தத் தமிழைச் சோலைக் கிளியின் கவிதையிலும், எஸ்.பொ.வின் படைப்புகளிலும் படித்து மகிழ்ந்திருக்கிறேன். கவிஞர் முத்துமீரானின் கொண்டு வாடா கொலைவாளை என்ற இத்தொகுப்பில், மட்டக்களப்பின் கொஞ்சு தமிழ், போர்க் கோலம் கொண்டிருக்கிறது.

ஈழத்தமிழர்களிடையே முஸ்லிம் சிறுபான்மை மக்களது நிலை, இன்று ஒருவகையான ஊடாட்டத்தில் இருக்கிறது. மொழியால் தமிழர்களாகிய இசுலாமியரைத் தம்மிலும் வேறுபட்டவர்களாக இந்து சமயம் (சைவம்) சார்ந்த தமிழர்களும், இந்துத் தமிழர்களைத் தம்மிலும் வேறுபட்டவர்களாக இசுலாமியர்களும் கருதும் ஒரு மனப்பாங்கு இன்று முற்றிப் போயிருக்கிறது. இந்த வேறுபாடு சமயம் சார்ந்தது என்பதுதான் உண்மையே தவிர, மொழி சார்ந்ததும், இனம் சார்ந்ததும் அன்று. சமயம் சார்ந்த இந்த வேறுபாட்டை இனம் சார்ந்தததாக வளர்த்துவிட்டது, சைவத்தமிழர்களும், இசுலாமியத் தலைவர்களுந்தான். தமிழர்களாகிய நாம், இசுலாமியர்களாகிய அவர்கள் என்றும், இசுலாமியர்களாகிய நாம் தமிழர்களாகிய அவர்கள் என்றும் பாகுபடுத்திக் கொள்வது வரலாற்றுக்கு முரணானது.

தமிழகத்தில் சமயப் பிரிவுகள் உண்டு. இந்துக்கள், இசுலாமியர், கிறித்துவர் என்ற இந்தப் பிரிவுகள் சமயஞ்சார்ந்தனவே தவிர மொழி சார்ந்தவை அல்ல. தமிழகத்தின் வட மாவட்டங்களில் உருது பேசும் முஸ்லிம்கள் உண்டு. அவர்கள் மொழியால் வேறுபட்டு நிற்பது உண்மை. எனினும் பெரும்பான்மைத் தமிழ் பேசும் முஸ்லிம்கள் தம்மைத் தமிழர்களாகத்தான் அடையாளப்படுத்திக் கொள்கிறார்கள். இங்கு வளர்ந்த திராவிட இயக்கத்தின் ஆக்கப் பூர்வமான பங்களிப்பாக இதைக் கருதலாம். இது மட்டுமின்றி, முஸ்லிம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களிடையே வளர்ந்த முஸ்லிம் லீக் அதனுடைய தலைவர் காயிதே மில்லத் இசுமாயில் சாகிப் அவர் களும், தமிழர் என்ற அடையாளத்தைத் துறந்தவர் அல்லர். இந்தியாவின் ஆட்சி மொழியாகத் தமிழை ஆக்கவேண்டும் என்று வாதிட்டவர். இசுலாமியர் களுடைய இலக்கிய மாநாடுகளிலும், ஊர்வலங்களிலும் இசுலாம் எங்கள் வழி - இன்பத் தமிழ் எங்கள் மொழி என்ற முழக்கத்தைத் தொடர்ந்து கேட்கலாம். இலங்கையில் இப்படி ஒரு தலைமை, இரு பக்கத்திலும் நிகழாதது ஒரு வரலாற்று அவலந்தான்.

மட்டக்களப்புப் பகுதியில் இசுலாமியர்களும், இந்துக்களும் குழாய்ப்பிட்டுப்போல் வசிக்கின்றனர் என்பார்கள். குழாய்ப்பிட்டில் பிட்டு மாவும், தேங்காய்ப் பூவும் அடுத்தடுத்து அமைந்திருக்கும். மிக நெருக்கமாக வாழும் இருபெருஞ்சமயப் பிரிவினர். இனவாத அரசியல் தலைதூக்கியபோது, இந்த நெருக்கமான உறவுகளிலம் பிளவுகள் தலைதூக்கின. ஒருவரை ஒருவர் பிறர் என்று பிரித்துக்கொள்ளும் கொடுமை சூழப்பட்டது. இந்தச் செயற்கையான பிரிவுகளைக் கடந்து வருவதுதான் இருசமயப் பிரிவினர்க்கும் நலந்தரக்கூடியது என்று, இத்தொகுப்பைப் படிக்கும்போது சொல்லத் தோன்றியது.

**எங்கள் மண்ணில் மழைபொழியாமல்**
**இரவிலும் பகலிலும் குண்டுகள் பொழிவதால்**
**மண்டுமனையோடு மக்களும் அழிந்து**
**கூடுகளில்லாக் குருவிகள் போல**
**அலைந்து திரிகிறோம் அகதிகளாக**
**எங்கள் மண்ணில் இப்பொழுதெல்லாம்**
**இரக்கமில்லாத இனத்துவேசமும்**
**சிரசில்லாத அரசனின் ஆட்சியும்**
**விரசி எங்களை விரட்டுகின்றன**
**மானிடமிழந்து மண்ணோடு மண்ணாய்**
**போனதினாலே...**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-என்று தொடரும் கவிஞரின் துன்பத்தில், மதங்கடந்த மானுடத்தின் குரல் ஒலிப்பதைக் கேட்கலாம்.

ஈமான் உறுதிமிக்க கவிஞர்.முத்துமீரானின் சொற்களில், பள்ளிவாசலில் நடந்த துயரங்கள் மட்டு மல்லாது கோயில்களில் நிகழும் கொடுமைகள் கூடச் சித்திரிக்கப்படுகின்றன. மேலும் மதத்தை விற்று உடல் வளர்க்கும் போலிச் சாமிகளும், மதவாதிகளும் கண்டனம் செய்யப் படுகின்றனர்.

**இதனால்,**
**ஏழைகளின் தோத்திரங்களை, இப்பொழுது**
**ஏகன், ஏற்க மறுக்கிறான்.**
**எனவே**
**வேதங்களை எரித்துவிட்டு**
**வேடதாரிகளை அழிக்கப் போகிறோம்.**
**உலகில்**
**சத்தியம் செத்தபின்னர்**
**சமயம் தேவையா?**

-பரந்து கெடுக உலகியற்றியான் என்றும், ஜகத்தினை அழித்திடுவோம் என்றும் காலகாலமாகத் தொடரும் ஆவேசம், இந்த இறைநேசரின் நெஞ்சிலும் பீறிடுகிறது.

கவிஞர்.முத்துமீரான் மரபு யாப்பிலிருந்து விடுபட முயல்துவம் இத்தொகுப்பினூடாகத் தெரிகிறது. புதுக் கவிதை, மரபிலிருந்து விடுபட்டதற்கு, முதன்மையான காரணம், பிசிறில்லாத அசலான கவிதையைக் கண்டடைவதுதான். மரபு பற்றிய புரிதலோடு - புதுக்கவிதைக்குள் நுழையும் போது மரபின் உறுத்தலான கூறுகளைத் தவிர்த்து விடமுடியும்.

கவிஞர். முத்துமீரானுக்கு மரபின் அமைதியைக் குலைப்பதில் கொஞ்சம் தயக்கம் இருப்பதாகத் தெரிகிறது. அதனால் புதுக்கவிதை வடிவத்துக்கு மாறும் பொழுது, மரபின் துணுக்கையும் மணத்தையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு வரத்தான் செய்கிறார். இவரது முந்திய படைப்புகளை மதிப்பிட்ட திறனாய்வாளர்கள் சுட்டிக் காட்டியபடி, தேவையற்ற சொற்களை இன்னும் தணிக்கை செய்திருப்பாரேயானால், இவை இன்னும் பட்டை தீட்டப்பட்டிருக்கும். எந்த ஒரு மாகவிஞனும் எழுத எழுதத்தான் தேர்ச்சியும் திறனும் பெறுகிறான். தேவை அயராத முயற்சி, திறன் நோக்கிய நகர்வு. கவிஞரின் தொகுப்புகளை ஓரளவு தொடர்ந்து அவதானிக்கும் பொழுது கவிஞரின் முயற்சி நம்பிக்கை அளிக்கிறது.

திரு. முத்துமீரானின் சிறப்பு நாட்டுப்புற மரபு சார்ந்து மட்டக்களப்புத் தமிழில் இயங்குவது. அப்படிப்பட்ட ஒரு கவிதையையும் இதில் படித்து மகிழ முடிந்தது.

**சின்னப்பேரன் என்னைப் போட்டு**<br>
**சிரிப்பு காட்டுகிறான் - வாயால்**<br>
**நெறிப்பு காட்டுகிறான்.**

-என்று தொடங்கும் சின்னப்பேரன் என்ற சந்த நெடுங்கவிதை. தமிழகத்தில் இது எழுதப் பட்டிருக்குமே யானால் என்னைச் சிரிப்புக் காட்டுகிறான், அல்லது எனக்குச் சிரிப்புக் காட்டுகிறான் என்று தான் வந்திருக்கும். என்னைப் போட்டு வரவே வராது. அதுபோலத்தான் வாயால் நெளிப்புக் காட்டுகிறான் என்பதும். இவை யெல்லாம் அந்த மண்ணில் மலர்பவை. இந்தப் பாடலை இசையமைத்துப் பாடினால், என் போன்ற தாத்தாக் களும், பாட்டி மார்களும் பரவசமடைவார்கள்.

கவிஞர்.முத்துமீரானின் வாசகனாகத் தொடர்வதில் எனக்கு மகிழ்ச்சி இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு சொட்டுக் கண்ணீராவது

..............................

### எஸ். முத்துமீரான்

இயற்கை அன்னையின் இனிய தாலாட்டில், இன்புறும் கிராமத்தின் சொந்தக்காரன், நான். என் கிராமத்து மக்களின் இன்ப துன்பங்களில் பங்கு கொண்டு, அவர்களோடு ஒன்றித்து, நகமும் சதையுமாய் வாழும், ஒரு படித்த பட்டிக்காட்டான். இந்நூலில் உள்ள கவிதைகள் எல்லாம், என் கிராமமும், அதில் வாழும் மக்களின் அவலங்களும், ஆசைகளும், அடக்கமுடியாத வெப்புசாரங்களும், வெறுப்புகளுமேயாகும். இவை இனத்துவேசிகளையும், இரக்கமில்லா சமூகத் துரோகி களையும், காம வெறிபிடித்த கயவர்களையும் காறி உமிழ்ந்து, கடித்துக் குதறி எறிவதை, நீங்கள் படிக்கும் போது அறியலாம்.

அரக்க குணம் படைத்த ஆட்சியாளர்களையும், அவர்களின் அவலங்களையும், அறிவையும் மதத்தையும் விற்றுப் பிழைக்கும் வேடதாரிகளையும் முற்றாக வெறுக்கும் ஆளுமையும் துணிவுமுள்ள வழக்கறிஞன் நான். இதனால்தான் என் கவிதைகள் வீச்சாகவும், வீரிய முள்ளவைகளாகவும், உங்களிடம் வாதிட வந்துள்ளன.

அழிந்து சிதைந்துவிட்ட என் கிராமத்தையும், என்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரினும் மேலான என் மக்களையும், அவர்கள் படும் துன்பங்களையும், வேதனைகளையும், என் கவிதைகள் உங்களிடம் அழுதழுது கூறும். அவைகளை நீங்கள் நேசித்து, படித்து, ஒரு சொட்டுக் கண்ணீராவது விடுங்கள். கானக் குயிலோசையும், பட்சிகளின் இனிய கீதமும் கேட்ட என் கிராமங்கள் எல்லாம் பேய்களின் சுடுகாடாய்ப் போய் இன்று, வதங்கிவிட்டன. இவ்வுண்மைகளின் யதார்த்தங்களே இக்கவிதைகள்.

இந்நூல் சிறப்பாக வெளிவர நேர்நிரை வெளியீட்டக உரிமையாளர் இனிய நண்பர் கவிஞர் யுகபாரதி மனமுவந்து உதவியினார்கள். இவருக்கும் அன்புத் தோழர்களான பேரா மு. அப்துல் ரசாக், பேரா முனைவர் மு.ஹ. நத்தர்சா, நாடறிந்த நற்கவிஞர் இன்குலாப், நூல் வடிவமைப்பில் உதவிய நண்பர்கள் எல்லோருக்கும் நன்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதியைத் தா!

எங்கள் வாழ்க்கையொரு,
எழுத்தழிந்த கிழிந்த புத்தகம்
இப்புத்தகத்தை, இன்று
விடியாத இரவும், புரியாத பகலும்
கறையான்போல் அரிக்கின்றன,
மனித நேயமில்லாச் சப்பாத்துகளும்,
இதயமில்லா இரும்புத் தொப்பிகளும்
இரவும் பகலும், எங்கள் குடில்களுக்குள்
வெண்புறாக்களைத் தேடித்தேடி
வெறிநாய்களாய் ஊளையிடுகின்றன,
அநியாயமும், ஆணவமும் புணர்ந்துபெற்ற
இனத்துவேசம், எங்க்ள் குருதியைக் குடிக்க,
சூனியவெளியில் விமானங்கள் பறக்கின்றன.
சூம்பிக்கிடக்கும் எங்கள் முலைகளில்,
துப்பாக்கிகள் கீறுவதைப் பார்த்து
பக்கத்தில் கிடக்கும் பச்சிளங்குழந்தைகள்,
பசியால், ஈனக்குரல் எழுப்புகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் தூக்கத்தை மறந்து,
அமைதியைத் தேடும் சிறகில்லாப் பூச்சிகள்
அரசியல்வாதிகளின் மதுக்கோப்பைக்குள்
அநியாயமாகத் தவறிவிழுந்த அப்பாவிகள்.
நிலா, இல்லா வானத்தில் நாங்கள்
வெள்ளிகள் தேடும் குருடர்கள்
பெயரில்லா எங்கள் ஊரெல்லாம், இன்று
உயிரில்லாக் கடவுள் சிலைகள்
மலிந்து விட்டன.
எந்தக் கடவுளும்
எங்களுக்காகப் பேசவில்லை.
கல்லாய் இருக்கும் அவர்கள்
கண்கள் திறக்கவில்லை,
மனிதமில்லா ஊரும் வேண்டாம்.
சீவனில்லாக் கடவுளும் வேண்டாம்
உயிருள்ள எங்கள் இறைவா!
உலகத்தைக் காப்பாற்றி அமைதியைத் தா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானில் பறக்கவிடு

வண்ணக் குருவியாய் என்னைப்
படைத்து நீ,
வானில் பறக்கவிடு - நான்
கண்ணீரில் வாடிக் கதறி அழும் மக்கள்
கவலையைப் போக்கி வர
ஏழைகள் வாழ்க்கையைச் சூதுக்களமாக்கும்
எத்தர் அழிவதற்கு - நான்
வித்தைகள் கற்று விதியினை, மாற்றிட
சத்தியைத் தந்துவிடு
வையம் செழித்து வளங்கள் பெருகிட
வாழ்த்தி, என்னையனுப்பு - நான்
வாரிவளங்களைக் கோரியே வந்திங்கு
பாரை நிரப்புதற்கு
கொடிய துவேசிகள் கொடுமையழித்திட
கொடுவாளைத் தந்துவிடு - நான்
வெட்டியழித்து வேரோடு சாய்த்துடன்
கெட்டியாய் வந்துவிட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைப்புகளெல்லாமே
பரமனின் சொத்தென்று
பறையை அடிப்பதற்கு - நான்
பாடிப் பறந்துபோய் ஓடியே வந்திட
பாதையைக் காட்டிவிடு
மானிட நேசம் மனித மனங்களில்
மலர்ந்து ஒளிர்வதற்கு - நான்
ஆனந்தமாக அங்கு பறந்து போய்
அன்பினைக் கூட்டிவர.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்ணல் வருவானா?

வானில் தெரியும் வளர்பிறையை,
வளைத்து வில்லாய் எடுத்துவந்து,
ஏழை உழைப்பை சுரண்டிவைத்து,
இரவும் பகலும் கூத்தியுடன்,
கூடிக்குலாவி மதுவெறியில்,
ஆடித்திரியும் கொடியவரை,
அம்பால் எய்து அழிப்பதற்கு,
அண்ணல் ஒருவன் வருவானா?

சாதிவெறியால், துவேசத்தால்
சண்டைகுழப்பம் செய்பவரை,
பொய்யைச் சொல்லி ஏமாற்றும்
போலித்தலைவர், கயவர்களை,
மதத்தைவிற்று உடல் வளர்க்கும்
மாயப்போலிச் சாமிகளை
அடித்து உதைத்து அழிப்பதற்கு
அண்ணல் ஒருவன் வருவானா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் வாழும் மக்களுக்கு
உரிமையளிக்க மறுப்பவரை,
கடவுள் சொத்தைக் களவாடி
காலம் கழிக்கும் கள்ளர்களை,
வேதம் சொல்லும் தத்துவத்தை
விதண்டாவாதம் புரிவோரை
அழித்து உலகைக் காப்பதற்கு
அண்ணல் ஒருவன் வருவானா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னப் பேரன்

சின்னப்பேரன் என்னைப் போட்டு
சிரிப்பு காட்டுகிறான் - வாயால்
நெளிப்புக் காட்டுகிறான்.
கையால் பிடித்து கழுத்தை நெரித்து
காலால் உதைக்கின்றான் - பின்பு
கட்டிக் கொஞ்சுகிறான்,

மாடாய் என்னை ஓடச்சொல்லி
பாடாய்ப் படுத்துகிறான் - உழுந்து
படுக்கச் சொல்கின்றான்.
கம்பையெடுத்து காலில் அடித்து
வம்பு செய்கின்றான் - என்னை
வதைத்து எடுக்கின்றான்

கன்னக்குழிகள் மின்னிச் சிவக்க
வண்ணம் காட்டுகிறான் - சிரிப்பால்
வாட்டியெடுக்கின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணையள்ளி என்னில் வீசி
மல்லுக்கட்டுகிறான் - எனக்கு
பல்லைக் காட்டுகிறான்.

தாயைக்கண்டு ஓடிச் சென்று
தாளம் போடுகிறான் - உடன்
தாவி வருகின்றான்.
பாலைக் குடிக்க பாய்ந்து பிடித்தால்
காலால் அடிக்கின்றான் - விரலால்
கவனம் காட்டுகிறான்.

மழலைமொழியால் அழகாய்ப் பேசி
மயக்கம் ஊட்டுகிறான் - பேரன்
மகிழ்வு காட்டுகிறான்.
பொம்மையொன்றைக் கையில் வைத்து
புதினம் காட்டுகிறான் - கேட்டால்
போவென்றேசிகிறான்.

மண்ணில் ஈசன் மகளுக்களித்த
விண்ணின் வெள்ளியடா! - அவன்
கண்ணின் ஒளியடா!
சின்னப்பேரன் எங்களுக்கெல்லாம்
சிரிக்கும் தெய்வமடா! - வீட்டின்
சிறப்பின் மனிதனடா.

அன்புப் பேரன் செய்யும் குறும்புகள்
அத்தனை இன்பமடா! - அவைகளில்
அகமும் குளிருதடா!
காந்தள் விரல்களால் காட்டும் வித்தைகள்
கண்ணுக்கினிமையடா! - இதயம்
களித்து மகிழுதடா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்பு

பாலில்லா முலையைப் பார்த்து
பச்சக்குழந்தை பரிதாபமாக அழுகிறது.
அடுப்பில் அரிசியில்லா உலைகூட,
அவதிப் பட்டுக் கொதிக்கிறது.
ஏழ்மையும் ஏலாமையும் சேர்ந்து
என்னோடு போராடும் போது,
பசியால்வாடும் குழந்தையின் அழுகை,
வெறும் உலையில்
வெந்து கொண்டிருக்கிறது.
குப்பிவிளக்கு குற்றுயிராகித்
துடிக்கும்போது,
கொழுநன் குறட்டை விடுகிறான்
அப்பொழுது,
குலுங்குமென் இளமையில் குறிவைத்து,
இருட்டுக்குள் ஒருவன் அழைக்கிறான்.
கதறும் குழந்தையின் குரல் கேட்டும்,
கடவுள் கல்லாய் இருக்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்துவங்களையும், சமயங்களையும்
தலைமுழுகிவிட்டு,
பழிகளையெல்லாம்
பாவம்! பரமனின் தலையில் போட்டு
குழந்தைப் பசியைத்தீர்க்க
பாயை விரிக்கிறேன்.
கற்பென்ன உலகில் கடவுள்சொத்தா?
விற்பதைத் தடுக்க,
வேதங்கள் கூறட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய் மண்

உணவளித்து உயர்வு தந்து, மனிதம் வாழ
உரிமைதந்த தாய்மண்ணே வாழ்க! வாழ்க!!
தாய்மண்ணை மதித்துலகில் தரமுயர்த்தி,
தரணியெல்லாம் அவள்பெயரை
உயரச்செய்வோம்.
அன்னையவள் மனங்குளிர செல்வங்களை,
அள்ளிவந்து அவள்மடியில் குவித்திடுவோம்.
வல்லவராய் வாழ்ந்துலகில் புதுமைசெய்து,
வளங்கொளிக்கத் தாய்மண்ணை
ஆக்கிடுவோம்
பிறந்தமண்ணின் பெருமையினை
பிறர்மதிக்க
பேரெடுத்து ஏடுகளில் பதித்திடுவோம்
போட்டியையும் பொறாமையையும்
விட்டெறிந்து,
நாட்டுக்காய் உழைப்பதற்கு
நாமொன்றாவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதிமத பேதமெல்லாம் தாய்மைக்கேது?
சோதிவடிவான அவள், தூய்மைமுன்னே.
வெறிபிடித்த அரக்கர்களை அழிப்பதற்கு
வேற்றுமையைத் துறந்துவிட்டு வீரராவோம்.
கருணையில்லாப் போரரக்கன் கையில்பட்டு
கலங்குமெங்கள் தாய்மண்ணைக்
காப்போம் வாரீர்!
உலகெல்லாம் சென்றாலும்
சொந்தமண்ணின்,
உயர்வுக்கு ஈடேது வாழ்நாளிலே.

மற்றவர்கள் கல்வியிலே உயர்வதற்கு
மரஏணி, கொழுகொம்பாய் தன்னையாக்கிக்
கஞ்சிக்கும் வழியின்றிக் கண்ணீர்சிந்தும்
கல்விமான் எல்லோர்க்கும் உதவுவோமே

காலத்தை வென்றுலகில் நிமிர்ந்து நிற்கும்
கல்விக்காய் பாடுபட்ட நல்லோர்வாழ
அல்லாஹ்வின் அருள்மாரி பொழிவதற்கு
எல்லோரும் ஒன்றாக இரஞ்சுவோமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படைதிரண்டு வாருங்கள்

கண்ணுக்குள் என்னைக்
களவாகப் பூட்டிவைத்து
சொல்லாமல் போனவுந்தன்
சோகமென்னை வாட்டுதடி!
நெஞ்சத்தில் உன்னுருவம்
நிலைத்து இருக்கையிலே
வஞ்சகர்கள் உன்னை
வஞ்சித்துக் கொன்றதென்ன?
சாதிவெறி பிடித்த
சண்டாள நாய்களெல்லாம்
காணப் பொறுக்காமல்
கடித்துக் குதறினரோ?
ஏழையுந்தன் வண்ணத்தை
இரக்கமில்லாப் போரரக்கன்,
இனத்துவச வெறிபிடித்து
இரக்கமற்று அழித்தானோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈசன் எங்கே?

இறையில்லங்களுக்கு,
ஈசனைத் தேடிப் போனோம்,
அவன், பணக்காரர்களின்
மாடமாளிகைகளில்
மயங்கிக் கிடப்பதாக,
பூசாரிகளும், புரோகிதர்களும் கூறிப்
பூணூலைப் பிடிக்கிறார்கள்.
சாஸ்திரம் அறிந்த சமயக்குரவர்கள்,
பிச்சைப் பாத்திரங்களை வீசி விட்டு,
பந்தம் பிடிப்பதிலும், மந்திரிகளுக்கு
பல்லக்குத் தூக்குவதிலும் உழைக்கின்றனர்
பட்டம் பெறுவதற்கு, இவர்கள்
அரசியல்வாதிகளிடம்,
அடிமைகளாய் ஆகிவிட்டார்கள்,
இதனால்,
ஏழைகளின் தோத்திரங்களை, இப்பொழுது
ஏகன், ஏற்க மறுக்கின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே,
வேதங்களை எரித்துவிட்டு,
வேடதாரிகளை அழிக்கப்போகிறோம்.
உலகில்,
சத்தியம் செத்தபின்னர்,
சமயம் தேவையா?
தோழர்களே! தோள்களை நிமிர்த்தி
துப்பாக்கிகளைத் தூக்கியெடுங்கள்.
துரோகிகளையும், துஷ்டர்களையும்
துரத்திக் கொல்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈசன் எங்கே?

பகலில் சூரியனும்,
இரவில் நிலவும்,
எங்கள் குடிசைகளுக்குள்
எங்களைக் கேட்காமலே வந்து,
எங்கள் பசியையும், பாவங்களையும்
பார்த்து விட்டுப் போகின்றன.
இரவிலும் பகலிலும் அழுதழுது,
இறைவனைத் தேடித் தேடி,
கோயில்களுக்கும், பள்ளிகளுக்கும் போய்க்
கும்பிட்டாலும்,
ஈசன் எங்கள் குடிசைகளுக்கு
இன்னும் வரவேயில்லை.
ஏழைகளைக் காண விரும்பாத ஈசனை,
இனியேன் கும்பிடவேண்டும்?
அதனால்,
அவன் வாழும் இடங்களைத் தேடி,
அழிக்கப் போகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாவிகள்

உடல்தந்து, உயிர்தந்து, உறுதியோடு
உலகத்தில் வாழ்வதற்கு உணவும்தந்து,
அருட்கொடையாய் அண்ணலரை
எங்களுக்கு
அழகான பரிசாக ஆக்கித்தந்த,
அல்லாஹ்வை மறந்துலகில் வாழுகின்ற
எல்லோரும் இவ்வுலகில் பாவிகளே!

வல்லவனாம் அல்லாஹ்வை வாழ்நாளிலே
வணங்காது சாத்தானின் கூட்டாளியாய்,
அண்ணல்நபி பொன்மொழிகள்,
போதனைகள்
அத்தனையும் புறத்தொதுக்கி, எப்பொழுதும்
ஏழைகளை எளியவரை ஏய்த்துவாழும்
இரக்கமில்லா எல்லோரும் பாவிகளே!
ஒழுக்கத்தை விலைபேசி விற்பவரும்
உயர்பண்பை மறந்துலகில் வாழ்பவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிம்மதியைத் தா!

**ப**சியின் கொடுமையால் வதங்கிக் கிடக்கும்
எங்கள் குழந்தைகள்,
இரவு நேரங்களில்,
குளிரைத் தாங்க முடியாமல்
கொடுகிக் கொண்டிருக்கிறார்கள்.
பாவப்பட்ட ஆத்மாக்களைச் சுமக்கும்
தேவனின் தூதர்கள், விழிப்படைந்து,
எங்களைச் சுமப்பதற்கு,
எப்போது வருவார்களோ?
எங்கள் அடுப்புக்குள் தூங்கும் பூனை
என்றுதான் விழிக்கப்போகிறதோ?
குண்டுகள் துளைத்த குடிசைகளுக்குள்,
தென்றல்காற்று, புகுந்து வருமா?
சதா, எங்கள் செவிப்பாறைகளை
உடைக்கும்
சப்தங்கள், தணிந்து
எங்களைவிட்டு எப்போது மறையுமோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பனையிலும் நிம்மதி இல்லாக்
காலத்தை அழித்து,
எங்கள் மண்ணறைகளில்
நிம்மதியைத் தா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடிகாரன்

ஒ ற்றிப் போட்ட குருத்து மணலில்
எச்சில் துப்புகிறான் - வெறியில்
இழிவாய்ப் பேசுகிறான்
பன்றியைப் போல படுத்துக் கிடந்து
பல்லைக் காட்டுகிறான் - மலத்தை
படுக்கையில் கழிக்கின்றான்
உதிரம்சிந்தி உழைத்த பணத்தை
ஊதித் தள்ளுகிறான் - கசிப்பை
உறிஞ்சிக் குடிக்கின்றான்.
கஞ்சிக்காக மனைவி மக்கள்
கஷ்டப்படும் போது - கழிசற
கசிப்பில் குளிக்கின்றான்.
எச்சில் உணவை ஏங்கித் தவித்து
ஏப்பம் விடுகின்றான் - கனவில்
இன்பம் காண்கின்றான்
மதியையிழந்து மணலில் படுக்கும்
மக்களின் முகத்தில் குக்கல் முக்கி
மலத்தைக் கழிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடிபோதை, பொய்களவு, சூதுவாதை
குலத்தொழிலாய் செய்கின்ற கொடியவரும்,
நல்லவரைச் சொல்லாலே நசுக்குகின்ற
எல்லோரும் இவ்வுலகில் பாவிகளே!

அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர்
அண்டங்கள் அனைத்துக்கும்
அவனே பெரியவன்,
அல்ஹம்துலில்லாஹ், அல்ஹம்துலில்லாஹ்
எல்லாப் புகழுக்கும் அல்லாஹ்வே
உரியவன்.
என்றிதை உணராத எல்லா முஸ்லிம்களும்
பொல்லாத பாவிதான், புரிந்துகொள்
உணர்ந்துகொள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசான்கள்

கல்விக்கு வித்திட்டு காலமெல்லாம்
நல்லவனாய் வாழ்வதற்கு வழியும்காட்டி,
கண்ணியத்தின் இருப்பிடமாய் வாழுகின்ற
நல்லாசான் எல்லோர்க்கும் இரஞ்சுவோமே.

எத்தனையோ ஆசிரியர் இருந்திட்டாலும்
சத்தியத்தின் வழிநடந்து சான்றோனாக
பக்தியுடன் வாழ்ந்துலகில் சேவைசெய்த
பண்பாளர், நல்லவரே குருவாவார்கள்.

அடுத்தவரின் பிள்ளைகளின் தலைதடவி
அன்போடு கல்வியினை ஊட்டுகின்ற
ஆசிரியர் ஒருபோதும் அழிவதில்லை
அவர்நாமம் எப்பொழுதும் நிலையானதே.
ஊணின்றி உறக்கமின்றி உழைத்துழைத்து
ஓடாகிப் போனபின்பும் மாணவர்க்காய்
ஓயாது பாடுபடும் ஆசான்களை
ஒருபோதும் மறவாது உலகமென்றும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தனே கருணைகாட்டு

இறைவா! எனக்கு
இலக்கியத்தில் பட்டம் தா!
பட்டாடை போர்த்தி
பணப்பரிசு, பாவோதி
கட்டாயம் தந்துவிடு,
கவிதையிலே நான்சூரன்
சிறுகதை, நாவலென்ன,
சித்திரங்கள், கட்டுரைகள்,
பத்தி விமர்சனங்கள்
படைப்பதிலே நான் பிரம்மா.
என்னுடைய படைப்புக்கள்
எல்லாமே நவீனம்தான்.
புதுமையென்று புகழ்ந்தெழுத
புரியாதோர் பலருள்ளார்.
பல்கலைக் கழகத்தில்
படிக்கவில்லை என்றாலும்,
தூக்கிப் பிடித்தென்னை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துளாவிப் புகழ்வதற்கு
கலாநிதிகள் கையிலுண்டு
கலங்காமல் பட்டம்தா!
சாஹித்திய பட்டம்தான்
சகலதிக்கும் நல்லதென்று,
மனையாளும் புலம்புகிறாள்
மறுக்காமல் தந்துவிடு.
மண்டலத்தார் கால்களையும்,
மந்திரியின் மூலத்தையும்
கண்டபடி நக்கிவிட்டேன்
கந்தனே கருணைகாட்டு!

நெஞ்சத்தால் நீயெழுதி
நினைவுகளாய்த் தந்தவுந்தன்,
காதல் கவிதைகள்
கண்ணீரில் கரையுதடி
பொல்லாத போரும்
புரியாத வாழ்வியலும்
இல்லாத உலகத்தை
இனிப்படைப்போம் வாருங்கள்.
சாதிவெறி நாய்களுக்கும்
சண்டாளத் துவேசிகட்கும்,
பாடம் படிப்பிப்போம்
படைதிரண்டு வாருங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொண்டு வாடா கொடுவாளை

நடுச்சாமம் ஆகுமட்டும்
நன்றாய்க் குடித்துவிட்டு
மயங்கிக் கிடக்கின்றான்
மக்கள் பிரதிநிதி.
மதியப் பொழுதுவரை
மயக்கம் தெளியாமல்
குக்கலைப்போல் படுக்கின்றான்
கூத்திமகன் குடிவெறியில்.
வெள்ளாப்பில் வந்தமக்கள்,
வேகா வெய்யிலுக்குள்
வெந்துருகி நிற்பதினை
வெறுந்தலையன் அறிவானா?
வேதனையைச் சாப்பிட்டு
வீதியிலே காத்துநிற்கும்
ஏழைகளின் வாக்குக்கு
இதுதானா மரியாதை?
வாய்குளிரப் பேசியெங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்குகளைப் பெற்றபயல்,
ஏனென்றும் கேட்காமல்
எச்சிலைப்போல் கிடக்கின்றான்.
கொந்திறாத்து தலைவனுக்கு
குரல்கொடுக்க மக்களென்ன,
கொமிசன் கொடுக்கின்ற
கூலிகளா, அரசியலில்?
ஏழை எளியவர்கள்
இருப்பதற்கு வீடுகளும்,
வைத்தியசாலையுடன்
வயல்நிலங்கள், காணிகளும்,
கல்விகற்க பள்ளிகளும்,
கற்றோர்க்கு வேலைகளும்
பெற்றுத் தருவதாகப்
பெருமையடித்த பயல்
உரிமையில்லா உலக்கையைப்போல்
உறங்கிக் கிடப்பதென்ன?
மக்களின் சக்தியினை
மடையனுக்கு காட்டுதற்கு,
கொண்டுவாடா கொடுவாளை
குருதிவெள்ளம் ஓட்டுதற்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரம் தா

இறைவா! என்றும் ஏழைகட்கு
இரங்கும் மனதைத் தந்துவிடு.
உலகைச் சுற்றிப் பறப்பதற்கு
உடலில் சிறகை அளித்துவிடு.
சாதித்துவேசம் சண்டைகளைத்
தேசம் முழுக்க ஒழித்துவிடு.
மனிதம் வாழ வழிசெய்து,
மக்கள் பண்பை உயர்த்திவிடு.
அன்பும் அறமும் செழித்தோங்கும்
ஆட்சியை உலகில் நிறுத்திவிடு.
போரிடும் மக்களை அழித்துவிட்டு
பொறுமையை மனங்களில் புகுத்திவிடு.
நீதியை, நேர்மையை மக்களிடம்
நிறைவாய் அளித்து நிரப்பிவிடு.
ஞானமும் கல்வியும் ஞாலத்திலே
நன்றாய் வளர்ந்திடச் செய்துவிடு.
கேட்ட வரங்கள் அத்தனையும்
கெதியில் கிடைத்திட அருள்தந்து,
உள்ளம் எல்லாம் மகிழ்ச்சியுற
உதவி செய்வாய் ஆண்டவனே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்களை வாழவிடு

இறைவா!
நீண்ட இரவும், நிம்மதியில்லா வாழ்வும்,
குப்பி வளக்கோடு போராடிப் போராடி,
வாழ்க்கை, ரணமாகி விட்டது.
விடியாத இரவுகளும், வேதனைகளும்
வெறுமையின் பிம்பமாகி விட்டன.
ஒழித்து விட்ட மனிதம், இனி
உயிர் பெற்று வருமா?
சமாதானம் தேடிப்போன தலைவர்கள்
தேசத்தைப் பணத்திற்கு விற்பதேன்?
அறத்தைப் போதிக்கும் வேதக்குரவர்கள்
விஷத்தைக் கக்குவதேன்?
வட்டமிட்ட சமாதானப் புறாக்களைச்
சுட்டுக் கொன்ற, கொடியவன் யார்?
குருதிகுடிக்கும் கொடிய பேய்களுக்கு
கோயில்களில் என்ன வேலை?
தர்மத்தை அழித்து விட்டு, சாத்தான்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதர்மத்தைப் பரப்புவதென்ன?
அரசனும், ஆட்சியும் அரக்கர்களுக்கு
அடிமையாகிப் போனதேன்?
இறைவா! இன்னும் ஏன் மௌனம்?
நேத்திரங்களைத் திறந்து பார்!
நீதியை நிலைநாட்டி, நேர்மையைக்
காப்பாற்று
ஆலயங்கள் உன்னுடைய வீடு,
அதில் நாங்கள் வாழ்வது முறையா?
உன் வீட்டில் நீ வாழவேண்டும்
அதற்காக,
எங்களுக்கு நிம்மதியைத் தந்து
எங்கள் வீட்டில் எங்களை வாழவிடு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோயில்கள்

இரவும் பகலும், கொடிய
பசியோடு போராடும் நாங்கள்,
பரமனைத் தேடி,
அவன்,
ஆலயங்களைத்
தேடிக் கொண்டிருக்கிறோம்.
ஆலயங்களெல்லாம்,
அகதி முகாம்களாய் ஆகிப்போனதால்
ஆண்டவன் ஒழித்துவிட்டான்.
ஏழைகள் கடவுளின் குழந்தைகளென்றால்
எங்களை விட்டு விட்டு
கடவுள் ஏன் ஒழிக்கவேண்டும்?
கோயில்களில் குடியிருந்த கடவுள்
ஒழிப்பதற்கு யார் காரணம்?
கடவுள் இல்லாத நாட்டில்
கயவர்கள்தான் இருப்பார்கள்.
ஆகையால்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களுக்கு கடவுள்தான் வேண்டும்.
ஒழித்த கடவுளைப் பிடித்துவந்து
கோயில்களில் குடியேற்றுங்கள்.
இல்லாவிட்டால்,
கடவுளில்லாத கோயில்களை
இடித்து விடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுதந்திரம்

எங்கள் தேசம்
எப்பொழுதே சுதந்திரம்
பெற்று விட்டதாக
எல்லோரும் கூறுகின்றார்கள்.
வருடா வருடம்
வானுயரக் கொடிகள் ஏற்றி,
சுதந்திரம் பெற்றதை
சோக்காய் கொண்டாடுகிறார்கள்.
அடிமை விலங்கை
அவிழ்த்து விட்ட,
அத்தனை தலைவர்களுக்கும்
மாலை போடுகிறார்கள்.
அப்படியானால்,
நாங்கள் மட்டுமேன்?
அகதிகளாக அடிமைப்பட்டு
முகாம்களில் கிடக்கிறோம்?
எங்கள் சுதந்திரத்தை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறித்துவிட்ட பாவிகள் யார்?
அவர்களுக்கு இருக்கும் சுதந்திரம்
எங்களுக்கு இல்லாமல் போனதென்ன?
இருளில் வாழும் எங்களுக்கு
இனிய சுதந்திரம் எப்பொழுது கிடைக்கும்?
எங்கள் கைவிலங்குகளை உடைத்து,
எங்கள் தேசத்தைத் தரிசிக்க விடுங்கள்.
எங்கள் தேசம்,
உங்களுக்கு மட்டும் சொந்தமல்ல அது
எல்லோருக்கும் சொந்தம்
எங்களுக்கும்தான் சுதந்திரம் கிடைத்தது
இன்று
எங்களுக்குச் சுதந்திரம் இல்லையென்றால்
இனி,
எங்களுக்கு இத்தேசம் வேண்டாம்.
அதை நீங்களே ஆளுங்கள்.
எங்களை நாங்களே ஆளுவோம்.
உரிமை, இல்லாத சுதந்திரத்தை,
உடைத்தெறிய, எங்கள்
உரிமைக்காய் போராடும் படை,
அணிவகுத்து நிற்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறந்தமண்

பிறந்த மண்ணைப் பறிகொடுத்து
பேருக்கு மனிதர்களாய்,
வாழுகின்ற நாங்களெல்லாம்
வீரமில்லாக் கோழைகள்.
காக்கை குருவிகளாய்
கலைத்துவிட்ட எங்களுக்கு
சொந்தமண்ணை மீட்டெடுக்க
சொறணையின்னும் வரவில்லை.
உள்ளத்தில் வீரம், எங்களுக்கு
உருப்படியாய் வருவதெப்போ?
பரம்பரையாய் வாழ்ந்தமண்ணை
பறித்தவர்கள் கொடியவர்கள்.
வளமாக வாழ்ந்த எங்கள்
வாழ்வைப் பறித்தவர்கள்
கொடிய மிருகங்கள்
கொலைகார வெறிநாய்கள்
ஒன்றாய் நிமிர்ந்து நின்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓதுங்கள் தக்பீரை!
மண்ணின்றி வாழ்வதிலும்
மரணம்தான் உலகில்மேல்
இறைவன் துணையோடு
இழந்தமண்ணை மீட்டெடுக்க,
ஓதுங்கள் தக்பீரை!
ஓநாய்கள் ஓடட்டும்
வாருங்கள் புறப்பட்டு
போருக்கு போவதற்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணிந்து வா!

பேருக்கு, பெருமைக்காய் மானிடத்தை,
பேசுகின்ற தலைவர்கள், மந்திரிகள்
ஊருக்குள் பட்டினியால் வாடும்மக்கள்
உணர்வுகளைப் புரியாமல் சாத்தான்களாய்,
போடுகின்ற கூத்துக்கள், கும்மாளங்கள்
புரியாதோ மக்களுக்கு போலியென்று.
அரைவயிற்றுக் கஞ்சிக்கு வழியிமின்றி,
அகதிகளாய் முகாம்களிலே வாடுகின்ற,
ஏழைகளைப் பாராமல் இன்பம்காணும்
எத்தர்கள் கூட்டத்தை அழிப்பதற்கும்,
இறைவனில்லாப்
பள்ளிகளை இடிப்பதற்கும்,
இரக்கமில்லாச்
சாமிகளை தொலைப்பதற்கும்
துணிந்துவா! தோழனே வீரத்தோடு.
தூரத்தில் வெற்றிஒளி தெரிவதைப் பார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் மண்

எங்கள் மண்ணில் மழைபொழியாமல்
இரவிலும் பகலிலும்
குண்டுகள் பொழிவதால்,
மண்டுமனையோடு மக்களும் அழிந்து,
கூடுகளில்லாக் குருவிகள் போல,
அலைந்து திரிகிறோம் அகதிகளாக.
காடுகளிலும், கட்டாந் தரையிலும்
மாடுகளாக, வீடுகள் இன்றி,
கூடிக் கிடக்கின்றோம். இன்று
தேடுவாரற்ற குப்பைகளாக
கொடுமையும் கொள்ளையும்
கொலைகளும் மலிந்து,
எங்கள் மண்ணில், இப்பொழுதெல்லாம்
இரக்கமில்லாத இனத்துவேசமும்,
சிரசில்லாத அரசனின் ஆட்சியும்
விரசி எங்களை விரட்டுகின்றன.
மானிடமிழந்து, மண்ணோடு மண்ணாய்ப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனதினாலே, இங்கு,
குருதிகுடிக்கும் கொடியபேய்களும்,
நாய்களும், நரிகளும்,
நன்றியில்லாத நயவஞ்சகர்களும்
ஆட்சியில் ஏறி அரக்கரைப்போல,
ஆளுகின்றார்கள், அசுரர்களாக,
எங்கள் மண்ணுக்கு என்ன நேர்ந்தது?
பஞ்சமும் பசியும் பாரை ஆள்வதேன்?
இந்தநிலைக்கு எங்கள் மண்ணை
இழிவாய் ஆக்கிய கயவன் யாரடா?
கொண்டுவா அந்த கொடிய மிருகத்தைக்
கொடுவாளால் வெட்டி, குழியில் புதைக்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகம் அழுகிறது!

குள்ளநரிக் கூட்டத்தில்
குழுத்தலைவன் எழுந்து நின்று
"உலகத்தில் நாங்கள்தான்
உயர்ந்தவர்கள், அறிஞர்கள்
தந்திரத்தில் பேர்போன
தரமான பீஷ்மர்கள்.
பந்தம் பிடிப்பதிலே
பட்டங்கள் பெற்றவர் நாம்.
ஆகையினால் எங்களுக்கு
ஆட்சியிலே பங்கேற்று,
உண்மைக்காய் போராட
உதவுங்கள் வாக்களித்து"
என்றங்கே பேசியதை
எல்லா நரிகளுமே
எழுந்து நின்று குரலுயர்த்தி
கைதட்டி வாழ்த்திக்
கசிந்துருகி நிற்கையிலே,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எச்சிலை எதிர்பார்த்து
ஏங்கித் தவித்தபடி,
பக்கத்துக் குப்பையிலே
படுத்திருந்த சொறிநாய்கள்,
“எங்களுக்கும் வேண்டும்,
‘எம்பி’ப் பதவிகளும்
‘ஏசி’ வைத்த வாகனமும்
‘ஓசி’ யிலே வாழ்வதற்கு
ஒழுங்கான பங்களாவும்,
தருபவர்கள் எவருடனும்,
தயார் நாங்கள் இணைவதற்கு”
ஒத்த குரலில்
உரக்கக் குரைத்துவிட்டு,
உமிழ்நீர்வடிய
ஊளையிடும் குக்கல்களை,
புழுத்த பிணமொன்றைப்
புசிப்பதற்குச் சண்டையிடும்
காகங்கள் கண்டு
“ஏழைகளின் தோழர்கள்
என்றென்றும் நாங்கள்தான்
கொள்ளை அடிப்போம்.
கொலை கூடச் செய்திடுவோம்,
ஆருக்கும் அஞ்சோம்,
‘அண்டவேள்’, கையிலுண்டு.
போடுங்கள் வாக்குகளை, நாம்
புதுமை படைப்பதற்கு”
என்றங்கே காகங்கள்
ஒன்றாகக் கத்தினவே.
அப்பொழுது, மனிதம்
அலறித் துடித்தங்கே,
“ஐயகோ!... இது என்ன
அநியாய ஆட்சியப்பா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரிகளுடன், சொறிநாய்கள்
நக்குண்ணும் காகங்கள்
ஆட்சியிலே ஏறி,
ஆளுவதா இந்நாட்டை?"
மனம்நொந்து மனிதமங்கே
மாண்டுவிட்ட துயரத்தில்
உலகம் அழுகிறது
ஒன்றும் புரியாமல்.

அண்டவேள் - பாதாள உலகக் கேடிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெண்புறாக்களும் சமாதானமும்

வானத்தை மூடிய புகைமண்டலம்
வாழ்க்கையின் எமனாக மாறி
காகங்களுக்கும், கழுகுகளுக்கும்
கர்மத்தைப் போதித்துக் கொண்டிருக்கிறது.
தர்மத்தைக் கடித்துக் குதறிய மனிதன்,
அதர்மத்தைக் குடித்து, எக்காளமிடுகிறான்.
செவிப்பறைகளை உடைக்கும்
சமாதானமும், வெண்புறாக்களும்
புகைமண்டலத்தில் சிக்கிப்
புலம்புவதால், பரமனின்
பள்ளிகளும், கோயில்களும்
விம்மிப் புடைக்கின்றன.
கோயில்களில் வேதம் ஓதும் பூசாரிகள்,
போதிமாதவனையும், ஏசுபிரானையும்
புதைகுழிகளில் தள்ளுவதைப் பார்த்து
உருவமற்ற அல்லாஹ், கோபத்தில்
உணர்வுகளைச் சுட்டெரிக்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எரியும் உணர்வுகளில் சிக்கிய
கண்ணனும், காண்டீபனும்
செஞ்சோற்றுக் கடன்தீர்க்க களத்தில் நிற்கும்
கர்ணனைக் கண்டு, கலங்கி
குந்தியின் முந்தானையைத் தேடுகின்றனர்.
பள்ளிகளிலும், கோயில்களிலும்
படியும் குருதிகளை நக்குவதற்காக
பேய்களும், காட்டேறிகளும்
பந்தமளித்து இறைவனைப் பலியிடுகின்றன
அழிவில்லா இறைவன்,
அகங்காரத்தையும்,
ஆணவத்தையும் வெறுத்து,
ஆலயங்களிலிருந்து வெளியேறிப்போய்
ஏழைகளின் இதயங்களில்
போய் வாழ்கிறான்.
பிச்சைப் பாத்திரமேந்துபவர்களும்,
பரத்தையின் வழித்தோன்றல்களும்
பாராள வந்ததினால்,
கலிங்கத்தில் அசோகன் மீண்டும்
வில்லேந்தி நிற்கிறான்.
மானிடம் பயத்தால் மாண்டுவிட
இன்று,
கோயில்களும்,
பள்ளிகளும் குழந்தைகளோடு
கொளுத்தப் படுகின்றன.
குழந்தைகளின் குருதியில் நீந்தும்
குருசிப் பேராளிகளும்
அரசின் சிரசில்லாத் தபோவனப்
போர்வீரர்களும், உலகில்
அட்டூழியங்களால் அடிமைப்பட்டு,
அம்மணமாக ஒழித்திருக்கும் மனிதத்திற்கு
மாற்றுடையளித்து, அதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானத்தைக் காக்க முன்வருவார்களா?
சிலப்பதிகாரமும், மணிமேகலையும்
கலிங்கத்துப் பரணியும், பகவத்கீதையும்
உயிரோடு உலகில் வாழ இவர்கள்
உரிமை அளிப்பார்களா?
திருக்குர்ஆனும், பைபிளும் சிலுவையில்
திருகாணியால், தொடர்ந்து
அறையப்படுமா?
பாலஸ்தீனமும், எங்கள் தேசமும் இதற்கு,
பதில் கூறுமா அல்லது
ஏசுபிரான் பரலோகத்திலிருந்து
இறங்கி வந்து,
பதில் கூறுவாரா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாத்தியாரும் மகனும்

பாலர் வகுப்பில் படிக்கின்ற சின்ன மகன்
எழுதுகிறான் கொப்பியிலே
எதுவும் புரியாமல்.
பென்சிலை ஒழுங்காய்ப்
பிடித்தெழுதத் தெரியாத
பிஞ்சுமகன் எழுதுவதை
பிழையென்றால் சிணுங்குகிறான்.
அழகான கொப்பிகளில்
அரைகுறையாய்க் கோடுகளைக்
கீறி அழிக்கின்றான்.
கிறுக்கனைப்போல் கேட்காமல்
சிற்றறிவைக் கொண்டு
சிகரத்தைப் பிடிப்பதற்குப்
பட்டத்தைக் கீறி - மகன்
பறக்கின்றான் வானத்தில்
பிஞ்சில் பழுத்ததினால்
அஞ்சாமல் மிதமிஞ்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நஞ்சைக் குடிக்கிறான்
நாராயணன் நானென்று.
உயிரெழுத்தைப்பற்றி ஒன்றும் புரியாமல்
ஓதுகிறான் தமிழ் மொழியை
உலுத்தனைப் போல் என்முன்னே.
தனக்குத் தெரிந்ததெல்லாம்
தத்துவங்கள் என்றோதி
தம்பட்டம் அடிக்கின்றான்.
தலைக்கிறுக்கு முத்தியதால்
புரியாமல் எழுதுவதைப்
புதுமையென்று சின்னமகன்
கிளிப்பேச்சு பேசுகிறான்
சளிபிடித்த மூக்காலே
நாலும் தெரிந்தவன் போல்
நாமத்தைச் சூட்டியிவன்
நல்லதையே நக்குகிறான்
நலிந்த சிறு குக்கலைப்போல்.
சேரமான்வாத்தி
சிகப்பாலே போட்ட கோட்டை
அழிக்க முடியாமல்
அவதிப்படுகிறான்.
கூலிக்கு மாரடித்துக்
குஞ்சரத்தில் ஏறிவிட்ட
பஞ்சத்து வாத்தியாரை
பரமனென்று துதிக்கின்றான்.
வாத்தியார் சொன்ன
வாய்ப்பாட்டை அப்படியே
மனப்பாடம் பண்ணி மகன்
மக்கனைப்போல் எழுதுகிறான்
நெஞ்சத்தில் இறையுணர்வு
கிஞ்சித்துமில்லாத
சேரமான் எழுதியதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரம்தாழ்த்திப் படிக்கின்றான்
வாத்தியார் எழுதியதை
வரியொன்றும் தப்பாமல்
பார்த்தெழுதும் என் மகனின்
படிப்புக்கு யார் பொறுப்பு?
ஓதுவதும் ஒழுகுவதும்
ஒழுக்கமென்று புரியாத
வழுக்கலெந்தன் மகனுக்கு
வழிகாட்டு இறைவா! நீ
வாத்தியார் முதுகை, இவன்
வளமாகச் சொறிவதினால்
பாலர் வகுப்பிலேயே - முதுமாணிப்
பட்டம் கிடைத்திடுமா?
சேரமான் வாத்தி
சிவலிங்கம் செக்கிழுத்த,
கதைகளைப் பிடிப்பித்து
மகனைக் கழுதையாய் ஆக்கிவிட்டான்.
சின்னமகன் நெஞ்சமெல்லாம்
சிவப்பாக மாறியதால்
கல்லாக வீட்டிலின்று
கலங்கிக் கிடக்கின்றான்
உலகம் புரியாமல் உளறுகின்ற என்மகனை
புதுவாத்தி கொண்டு நன்றாய்
புடம்போடப் போகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியாகம் சிரிக்கிறது

கொதிக்கின்றன 'மினா' ஊடே
குலக்கொழுந்தின் கரம்பற்றி
நடக்கின்றார் கலிலுல்லாஹ்
நாயனுக்கு அடிபணிந்து
தடுப்பதற்குத் துடிக்கின்ற
தரித்திரனாம் சாத்தானைத்
துரத்திவிட்டு நடக்கின்றார்,
தூயவனின் அருள்நாடி
அல்லாஹ்வின் தோழர்
அவசரமாய் போவதினை,
'அரஃபாவும்', மினாவும்
அதிசயித்து நோக்கினவே
ஈமானின் உறுதியினை
இகத்தோர்க்குக் காட்டுதற்கு,
அழைத்துவந்த பாலகனை
அறுப்பதற்கு முயல்கின்றார்.
மலையைப் பிளந்தகத்தி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுக்கிறது அறுப்பதற்கு.
பலமெல்லாம் சேர்த்து
பாலகனை அறுக்கையிலே,
தியாகத்தின் மனவுறுதி,
திக்கெட்டும் சிரிக்கிறது!
இப்றாகிம் நபிசெய்த,
இணையில்லாத் தியாகத்தின்
அருளாலே 'ஹஜ்' உலகில்
பொருளாகப் பிறந்ததுவே!

| | | |
|---|---|---|
| ஈமான் | - | மனம் |
| மினா | - | சவுதி அரேபியாவிலுள்ள பள்ளத்தாக்கு |
| கலிலுல்லாஹ் | - | இறைவனின் தோழர் இப்றாகீம் நபி |
| அரஃபா | - | ஹஜ்ஜுக்கடமையில் கட்டாயமாக ஹாஜிகள் தரிக்கும் மைதானம். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தண்டனைகள் போதும்

எங்கள் இறைவா!
ஏனுனக்கு இக்கோபம்?
ஆழி அலைகளுக்கு
அத்தனையும் பறிகொடுத்து
கேள்விக்குறியாய்
கிடக்குமெங்கள் வாழ்க்கையிலே,
புயலும், மழையும்,
பூமி அதிர்வுகளும்,
தொடர்ந்து வந்து எங்களுக்கு
தொல்லை தருவதென்ன?
எலும்போடு தோல்ஒட்டி
இருக்கின்ற எங்களிடம்
கண்ணீர்தான் மிச்சம்
கதியொன்றும் இல்லையப்பா!
கஞ்சிக்காய் நாங்கள்
கதறி, அழுவதைநீ,
பஞ்சத்தின் ஓலமென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வஞ்சித்து விட்டாயா?
தஞ்சமென்று உன்னிடத்தில்
தவித்துக் கிடக்கின்ற,
ஏழையெங்கள் வாழ்க்கையிலே
ஏனிந்த சோதனைகள்?
கருணையுள்ள ஆண்டவனே
கல்லாகிப் போனாயா?
நித்திரையும், நிம்மதியும்
நீர்மேல் எழுத்தாகப்
போனதினால் நாங்கள்,
புழுங்கிக் கிடக்கின்றோம்.
சீறிச் சினத்தெங்கள்,
சீவியத்தை சீரழித்த
'சுனாமி' அலையும்,
சுழற்காற்றும், அதிர்வுகளும்,
இனிவேண்டாம் எங்களுக்கு
இரங்கியெம்மை காத்துவிடு!
தண்டனைகள் போதும்
தாள்பணிந்து கேட்கின்றோம்,
நிம்மதியைத் தந்தெம்மை,
நித்தியனே வாழவிடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்பனை

கற்பனையில்,
நான் ஆகாயத்தில்
பறக்கும் போது,
மேகங்கள் என்னைப் பார்த்து
சிரிக்கும்.
சின்னச் சின்னக் குருவிகள்
கால்களையும், கைகளையும்
கொத்தும்.
நிலவும் வெள்ளிகளும் எனக்கு
வழிகாட்டும்
காற்றை எதிர்த்துப் பறக்கும்
என்னால்,
பூமியைப் பார்க்க நேரமில்லை.
ஆனால்,
மண்ணை நான் நேசிப்பவன்
என் மண்ணைத் தரிசிக்க
கீழே வருகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரும் எனக்கு,
மாலைபோட்டு மரியாதை செய்கின்றார்கள்.
ஏனென்றால்,
நான் வானத்தில் பறந்தவன்
எல்லாம் கற்பனையில்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலா

வானத்தில் வெள்ளிகள்
பூத்திருப்பதைப் பார்த்து
என் சின்ன மகன் கைகொட்டிச்
சிரித்தான்.
இன்னும் அவன் சாப்பிடவில்லை.
முகிலில் ஒழித்த நிலாவுக்கு
என்ன கோபம்?
வெள்ளிகள் சமாதானம் கூற
நிலா சிரித்தது
மண்ணைப் பார்த்து
முகில்கள் சிரிக்க
மழையும் சிரித்தது.
நிலா மீண்டும்
ஒழித்து விட,
சின்னமகன் அழுகிறான்
சமாதானம் வானில்
பிறக்குமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பைத்தியம்

என்னைப் பார்த்து எல்லா
மரங்களும் தலையாட்டின.
பழங்களைத் தந்து, அவைகள்
பாசம் காட்டின.
பறவைகள், கீதம் பாடின.
பூக்கள் பூத்துக் குலுங்கின.
மரங்கள் என்னோடு தனிமையில்
பேசும் போது,
மனிதர்கள் மட்டும்
என்னைப் பைத்தியமென்றார்கள்
பைத்தியம் மரங்களுக்கா அல்லது
மனிதர்களுக்கா?
காற்று கூறியது,
மரங்களுக்குப் பைத்தியமில்லை
பாவம்! மனிதர்களுக்குத்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறடிமண்

என் கால்கள் பலமற்று விட்டதால்
என்னால் ஓட முடியவில்லை.
எல்லோரும் எதையோ நாடி
ஓடிக் கொண்டிருக்கிறார்கள்.
நானும் மனிதன்தான்.
எனக்கும் உயிருண்டு.
உறவுகள் உண்டு.
ஆனால், இன்று
எல்லோரும் என்னை மட்டும்
தனிமையில் விட்டு
ஓடிக் கொண்டிருக்கிறார்கள்.
இனி,
என் இருப்பிடம் இதுதானா?
என் தனிமைக்கு
இனி விடிவுண்டா?
ஓட முடியாத என் கால்களுக்கு
சக்தி வருமா?
ஆறடிமண்தான்
ஆறுதல் கூறவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழை பொழிகிறது

இரவு தூங்கவில்லை.
ஆந்தைகள் அலறிக் கொண்டிருக்கின்றன.
கூதலால் நாய்;
கொடிகிக் கிடக்கிறது.
மௌனத்தை விழுங்கி விட்ட இரவு,
காற்றுக்கு ஆடுகிறது.
நிலா வெளிச்சத்தில்
மரங்கள் சிரிக்கின்றன.
வெள்ளிகள் முணுமுணுத்தபடி
மேகத்தை சபிக்கின்றன.
முகில்களின் பிரசவநோக்காட்டில்
பனித்துளிகள் பிறக்கின்றன.
உடல் குளிரால் நடுங்கி
விறைத்து விட்டது.
நான் நாதியற்று,
தெருவில் படுப்பதைப்பார்த்து,
மழைபொழிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈ

நான் கதை எழுதும்போது,
ஈயொன்று, என்பேனை நுனியை
தொட்டுத் தொட்டு முத்தமிடுகிறது.
அது ஒரு சின்ன ஈ
எழுதி முடிந்தால் பறக்கிறது.
எழுதும்போது வருகிறது.
ஈயைத் துரத்த
கையைத் தூக்கினால்,
என் கற்பனையெல்லாம்
கலைந்து விடுகிறது.
எனக்கும் ஈக்கும்
என்ன குழப்பம்?
என் கதையின்
கருவே ஈ தான்

ஈ - சிறுகொசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடை

வட்டத்திற்குள்
சின்னப்பூச்சி சிரிக்கிறது.
அதைப் பார்த்து,
பொறாமையால் காற்று
துரத்தப் பார்க்கிறது.
இதைப் பார்த்து,
என்னால் பொறுக்க முடியவில்லை.
வட்டத்தையும் பூச்சியையும் காப்பாற்ற
வளைத்து இன்னொரு வட்டத்தை
பெரிதாகப் போடுகிறேன்.
வட்டங்கள் இரண்டும்
பூச்சிக்காகவா அல்லது எனக்காகவா?
இதற்குரிய விடையை
யார் கூறுவார்கள்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்களம்

போர்க்களத்தில்
மனிதம் துடிக்கிறது.
வானத்தில் குண்டுகளால் பட்டமிடும்
குருசிப் போராளிகளும்,
தத்துவம் பேசும்
தபோவனத் துறவிகளும்,
சத்தியத்தை அழிப்பதில்
சண்டையிட்டுக் கொண்டிருக்கின்றனர்.
உலகத்தை விழுங்கிவிட
ஊளையிடுகிறான் தேவனின் புத்திரன்.
உயிர்ப்பலி பாவமெனும் துறவி,
உதிரத்தைக் குடித்து மகிழ்கிறான்.
ஊழித்தாண்டவமாடும் சிவன்
உண்மையை அறிந்து சிரிக்கிறான்.
ஆகையினால்,
ஒடுக்கப்பட்ட ஏழைகளும், வாழ்வில்
அடிமையாக்கப்பட்ட அப்பாவிகளும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதங்களைப் பூஜ்ஜியமாக்கிவிட்டு,
வேதனையில் வெந்துருகும்
மானிடத்தை உயிர்பிக்க,
போர்க்களம் போகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்துவிட்ட இறைவன்

தவளையை விழுங்கிய பாம்பு,
அசைய முடியாமல் கிடக்கிறது.
உயிருக்குப் போராடும் தவளை,
ஈனக்குரல் எழுப்புவதைப் பார்த்து,
தண்ணீரில் படுத்துக் கிடந்த
எருமை, கொம்பை ஆட்டுகிறது.
தும்பிகளெல்லாம் வானத்தில்
பறப்பதைப் பார்த்து, பிணந்தின்னிக்
காகங்கள் கத்திக் கொண்டு,
தும்பிகளைக் குறிவைத்து,
அம்புகளை எய்கின்றன.
சொறிநாய்கள், பாலுக்காய் அழும்
பச்சக் குழந்தைகளின்
குரல் வளைகளை கடித்து,
குருதியைக் குடிக்கின்றன.
கர்மத்தைப் போதிக்கும் கண்ணன்,
காண்டீபனைப் பார்த்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயங்குவதேன்?
சுதந்திரம் தேடிப் பறந்த வெண்புறாக்கள்,
பருந்துகளால் கொத்தித் துரத்தி
அழிக்கப்படுகின்றன.
கோயில்களும், பள்ளிகளும்
இறைவன் இல்லாமல் இருப்பதால்,
அவைகளில் பேய்கள் வாழுகின்றன.
மக்கள் இறைவனைத் தேடிக்
கூக்கிரலிடுகின்றனர்.
மறைந்து விட்ட இறைவன்
எங்கிருக்கிறானோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணங்கள்

*பீரங்கியின் சப்தங்கள்*
என் செவிப்பறைகளை உடைத்தன,
வானில் பறந்த குண்டுகள்,
வழி தெரியாமல்,
வளம் கொழிக்கும் வயல்களிலும்,
ஏழைகளின் ஏலாமை மனங்களிலும்
விழுந்து சிதறின.
சேற்றில் படுத்திருந்த எருமைமாடுகள்,
துப்பாக்கிகளைக் கடித்து,
மீன்குஞ்சுகளுக்கு உணவாக
ஊட்டிக் கொண்டிருந்தன.
சீருடையணிந்த, தேவதூதர்கள்,
கமண்டலத்தில் கங்கை நீரை
எடுத்து வந்து,
அரச மரங்களுக்கும்,
அப்பம் சாப்பிட்டவர்களுக்கும்
தெளித்தார்கள்.
உலகம், மௌன விரதம் பூண்டு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர்மத்தை அம்மணமாகப்
பார்த்துக் கொண்டிருக்கிறது.
எழுத்தாளர்களும், கவிஞர்களும்
பேனைகளை விமானங்களாக்கி,
சூனியவெளியில் பறக்கும் போது,
ஊடகங்கள் கூக்குரலிடுகின்றன.
எமன் மரணங்களுக்கு
விலைகளை ஒழுங்காக எழுதி,
தலையிலும், உடம்பிலும்
ஓட்டுவதில், தேவதாசிகளோடு
யந்திரம்போல்
இயங்கிக் கொண்டிருக்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காகங்கள் கத்துகின்றன

கடற்கரையின் குருத்துமணலில்
சின்ன நண்டுகள்,
ஓட்டை போடுகின்றன
இதைப் பார்த்து
வேகமாகப் பாய்ந்து வரும்
கடலலைகள்,
தாங்க முடியாத வேதனைகளால்,
தரையில் அடித்து, சதா
சத்தியம் செய்கின்றன.
அப்பாவிச் சிப்பிகளும், ஊரிகளும்
அடித்து நொறுக்கப்பட்டு,
அள்ளி வீசப்பட்டுக்கிடப்பதைப்
பார்த்து, கடற்காற்று
பெருமூச்சு விட்டுக்கொண்டிருக்கிறது.
சின்ன மீன்களைச் சுறாமீன்கள்
துரத்தித் துரத்திக் கடிப்பதைக் கண்டு
கடல் பொங்கியெழுந்து, ஆர்ப்பரிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடற்புட்கள் பறந்து பறந்து
கத்தித்திரிகின்றன.
அப்பொழுது, மனிதப் பிணங்கள்.
தலை, கால், கையில்லாமல், வந்து
கரையில் தத்தளிப்பதைப் பார்த்து
காகங்கள் கத்துகின்றன.
அசோகச் சக்கரவர்த்தி இன்னும்,
முக்தி பெறவில்லை.
கலிங்கத்துப் பரணியை விளங்காமல்,
மீண்டும் மீண்டும் படித்து அழுகிறான்
காகங்கள் ஓயாமல் கத்துகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈசன் அழுகிறான்

இரவில் கனவுகள்
புழுக்களாக நெளியும்போது,
பேய்கள் குருதி வெள்ளத்தில்
நீந்திக் கொண்டிருக்கின்றன.
அமைதியின் பெருமூச்சில்
ஏழ்மை துடிக்கிறது.
அரக்கர்கள்,
தேவனின் மாளிகையை ஆக்கிரமித்து,
ஆட்சி செலுத்துவதால்,
சாத்தான்கள் உலகின்
காவலாளிகளாகி,
குண்டுகளோடு நிற்கின்றனர்.
விடியாத மௌன இரவுகள்,
வேதனை நோக்காட்டில்
துடிப்பதைப் பார்த்தும்
மனிதம் வாய்மூடிக் கிடக்கிறது.
பாவம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டைப் பறிகொடுத்ததினால்,
நளமகராசன் உருவம்மாறி,
விதியோடு போகிறான்.
மக்கள் ஆலயங்களில்
குடிவந்து விட்டதால்,
சாத்தான்களும், அரக்கர்களும்
இப்பொழுது,
கோயில்களுக்கும் ஆலயங்களுக்கும்
குண்டுகளை வைக்கின்றனர்.
பாவம்!
இருக்க இடமின்றி ஈசன்
அழுகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூக்குக்கயிறு

இரும்புக் கதவுகளைத்
திறக்க முடியாமல்,
போராளிகள் குண்டுகளை,
விழுங்கிக் கொண்டிருக்கின்றனர்.
மனிதம்,
மிதிவெடிகளில் அகப்பட்டு,
கால்களையும் கைகளையும் இழந்து
தவிக்கிறது
பயங்கரவாதத்திற்கும்,
இனத்துவேசத்திற்கும், குழந்தைகள்
பலியிடுவதைப் பார்த்து,
தியானத்தில் இருக்கும் இறைவன்,
அண்டவெளியில்,
ஞானக் கண்களைத் திறக்கிறான்.
குருதி ஆறு கரைபுரண்டோடுகிறது.
தேவர்கள் சேர்ந்து,
துப்பாக்கிகளைத் துடைக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவர்க்கத்தின் கதவுகள்
பூட்டிக் கிடப்பதால்
நரகம் சிரிக்கிறது!
அகிம்சையைக் கட்டி இழுக்கும்
ஞானத்தின் சீடர்கள்,
மணிமேகலையைத்
துயிலுரிகின்றனர்.
மயானத்தில் பேய்கள், சேர்ந்து
பிணங்களை ருசிபார்க்கின்றன.
தூக்கு கயிறு, இன்னும்
எனக்கு கிடைக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூனை ஓடிவிட்டது

என் வீட்டுப் பூனை,
எதையோ கௌவிக் கொண்டு ஓடியது.
கற்பனையின் ஆட்சியிலிருந்த நான்,
காகிதங்களை விழுங்கி
தேவையற்ற தாஜ்மகால்களைக்
கட்டிக் கொண்டிருக்கிறேன்
அழகின் அடிமையாகிப் போன,
சக்கரவர்த்தி சாஜஹான்,
பொருளாதாரம் புரியாத முட்டாள்.
கருவாட்டை பூனை
களவாடி விட்டதாக,
மனைவி என்னைத் திட்டுகிறாள்.
இன்று, எனக்கு பட்டினிதான்.
வயிற்றில் எரியும் நெருப்பை,
அணைக்க முடியாமல், என் பேனை
காகிதங்களைக் கீறிக்கீறி
மகிழ்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜமுனா நதியோரத்திலிருந்து, கற்பனையில்
தாஜ்மஹாலைக் கட்டும் எனக்கு,
பூனையைப் பிடிக்க,
நேரம் ஏது?
வயிற்றில் எரிந்த நெருப்பு,
வீட்டிலும் எரிகிறது.
மனைவி பூனையைத்
தேடுகிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயம் அழுகிறது

இரவில் கொட்டும் பனியால்
அடிமைகளாகி நிற்கும்,
புற்களைப் பார்த்து,
மயக்கம் தெளிந்த வெட்டுக்கிளிகள்
சுதந்திரம் பேசின.
பாவம்!
விடிவைத்தேடி உலகம் அழும்போது
காகம்குருவிகள் கண்விழித்துக் கத்தின.
போர்க்களத்தில் வெற்றிபெற்று,
வீரனைப்போல் சூரியன் வருகிறான்,
இருளை விழுங்கிய உலகம்
எக்காளமிடுகிறது.
என்னால் தூங்க முடியவில்லை.
காய்ந்த வயிறு சுதந்திரமாக
கலங்கித் துடிக்க,
உறங்கிய உணர்வுகள்
உயிர்பெற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழையன கழிகின்றன.
காதல் மலர்ந்து
கனவுகள் கண் விழித்திட
இதயம், எதையோ தேடி
ஏங்கித் தவித்துக் கொண்டிருக்கிறது.
அமைதியும், நிம்மதியும்
பயங்கரவாதிகளின் அடிமைகளாகி,
இனத்துவேசிகளின் இல்லங்களில்
இருப்பதால்,
மலர்ந்த பொழுதைப் பார்த்து,
மனிதம் அழுகிறது
ஏழைகளுக்காக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிலென்ன?

என் உருவத்தின் பிம்பம்,
என்னைப் பார்க்கிலும்
பெரிதாக இருக்கிறது.
நான் நடக்கும் போது
என் பிம்பம் முன்னுக்கு போவதால்,
எனக்குள் மகிழ்ச்சி.
என்னையறியாமலே, நான்
உயர்ந்து விட்டதாக என்னைப் பார்த்து
என்னுருவம் கூறியது.
விரைவில், சூரியனைத் தொட்டு, அதன்
கோடுகளை அழித்து விடுவேன்.
காலத்தைப் பற்றியெல்லாம்
எனக்குக் கவலையில்லை.
இனி, நான்தான் பெரியவன்
பெரியவனுக்கு, உலகில்
சிறியவனெல்லாம் அடிமையா?
சூரியன் எங்கே?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் பிம்பம் மழையில்
நீந்துமா? இதற்கெல்லாம்
தேவன் தியானத்திலிருந்து விடுபட்டு வந்து,
பதில் கூறுவானா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்புழுக்கள்

மண்புழுக்கள் சேர்ந்து
என் இதயத்தைத் தோண்டின.
குருதி கசிந்தது
வேதனையில் இதயம்,
அழுதது.
என்னைப் பார்த்த வைத்தியன்
சிரித்தான்.
பயிர் செய்ய முடியாமல்
மண் காய்ந்து விட்டதாம்.
மனைவியும் மக்களும்
அழுதனர்.
புதிய வாய்க்கால்கள் வெட்டித்
தண்ணீர் பாய்ச்சுவதற்கு,
யந்திரங்கள் வேண்டும்.
மனைவியும் மக்களும்.
மண்புழுக்களைக் கொலைசெய்து,
போரில் வென்று விட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணுக்குப் புதிய வாய்க்கால்களால்
நீர் பாய்வதைப் பார்த்து,
வாழ்வு சிரிக்கிறது
எமன் ஏன் அழுகிறான்?
மண்புழுக்களைக் கொன்றது
குற்றமா?
புத்தகத்தை மூடி விட்டு,
சித்திரகுப்தன் பெருமூச்சு விடுகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுனாமிப் பேரலை

ஆண்டவனின் ஆணைக்கு அடிபணிந்து,
அவனளித்த சக்தியினால் அலைகளாகி,
ஆர்ப்பரித்து மேலெழுந்து அரைநொடியில்,
கோடிகளைக் குவித்து
வைத்து குபேரனைப்போல்,
மாடிகளில் வாழ்ந்தபெரும் மக்களையும்,
குடிப்பதற்கும் கஞ்சியின்றிக் குடிசைகளில்
குமைந்திருந்த ஏழைகளை, குழந்தைகளை,
சாதிமத பேதமின்றிச் சாகடித்து,
சத்தியத்தின் சக்தியினை சகலருக்கும்
சமனாகக் காட்டிவிட்டு முறுவலிக்கும்,
நித்தியனின் பேரலைக்கு, எங்கள் மீது
நிச்சயமாய்ப்
பழியிமில்லை, பகையிமில்லை.

மனம்நொந்து வாடுகின்ற மக்களுக்கு,
மனமிரங்கி ஈயாத மாந்தரையும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதிரத்தைச் சாறாக்கி உழைப்பவர்க்கு,
உதவாது வாழுகின்ற உலுத்தரையும்,
கீழ்த்தரமாய்ச் சாதிவெறி கொண்டலையும்,
கேடுகெட்ட போக்கிரிகள் எல்லோரையும்,
அறியாமல் ஆண்டவனின் அழிவுவந்து,
அரைநொடியில் அழிக்குமென்ற
உண்மையினை,
கண்மூடி விழிப்பதற்குள் சுனாமிமூலம்,
காட்டி மக்கள் படிப்பதற்கும்,
உணர்வதற்கும்,
படிப்பினையாய், உலகத்தில் வந்துபோன
பரம்பொருளின் பேரலைக்கு
அழிவேயில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்புரிவாய்

மானிடத்தை நேசித்து, வாழ்க்கையிலே,
மானிடராய் வாழுகின்ற மனம்தந்து,
மாண்புதந்து, மங்காப் புகழ்தந்து,
மழைபோன்று பொழிகின்ற கரங்கள் தந்து,
மக்கட்பேறு தந்து, மகிழ்வுதந்து,
மாறாத நேர்மைதந்து, உறுதிதந்து,
சத்தியத்தைக் காக்கின்ற சக்திதந்து,
சாதிவெறி இல்லாத தன்மைதந்து,
நித்தியனை நேசிக்கும் புத்தி தந்து,
நீதிக்காய் உழைக்கின்ற நேர்மைதந்து
நிழல் தந்து, குளிர்தந்து வாழ்வியலில்,
எழில் தந்து இரக்கம் தந்து
அருள் தந்து, பொருள்தந்து, கல்வி தந்து
அகிலத்தில் புகழோடு வாழ்வதற்கு
ஆண்டவனே! அருள்புரிவாய்
அடிபணிந்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிம்பம்

எனக்கொரு வரலாறு உண்டென்று,
என் பிம்பம் கூறும்.
சூரியன் என்னைப் பார்த்து
சிரிக்கும் போதெல்லாம்,
என்பிம்பம் என்னைப் பார்த்து சிரிக்கும்.
இரவில் என் பிம்பம்
என்னோடு உறங்குவதில்லை.
புல்லுக்கும் பிம்பம் உண்டென்று,
பனித்துளிகள் கூறுகின்றன.
உயிர்களுக்கெல்லாம் பிம்பம் உண்டா?
சிற்றெறும்பெல்லாம் கேட்டுக் கேட்டு,
என்னைச் சதா கடிக்கின்றன.
உயிரைப் படைத்தவன் ஈசனென்றால்,
பிம்பங்கள் யாருடைய படைப்பு?
எனக்கு உயிருண்டு.
ஆனால், என்பிம்பத்திற்கு உயிருண்டா?
நான் பகலில் போகுமிடமெல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பிம்பம் என்னோடு வருகிறது.
நான் மரநிழலில் இருந்து களைப்பாறினால்,
என்பிம்பம் எனக்குத் தெரியாமல்
ஒளியின்றி வாடுகின்றது.
நான் களைப்பாறும் போது,
என்பிம்பம் தன்னை அழிப்பது சரியா?
என் பிம்பத்தை அழிப்பவன் யார்?
நானும் என்பிம்பமும் ஒன்றானால்,
ஏனிந்த அநியாயம்?
என்னையும் என் பிம்பத்தையும்
அநியாயமாக அழித்து விடாதீர்கள்!
ஏனென்றால், நானும் என் பிம்பமும்,
ஆண்டவன் சொத்துக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் மலர்கள்

எங்கள் தோட்டங்களில்
இரவிலும் பகலிலும்,
பூத்துக்குலுங்கி, புதுமணம்வீசும்,
அத்தனை மலர்களும் ஆண்டவன் சொத்து.
எங்களுக்காக இறைவன் தந்த,
இந்த மலர்களின் அழகே அழகு!
சிவப்பு, வெள்ளை, மஞ்சள், நீலம்
எல்லா நிறங்களும் ஈசனின் நிறமே!
அவனுக்காக அவனே படைத்த,
அற்புத மலர்களைப் பறிப்பவன் யாரடா?
பூத்த மலர்களில் பேதங்கள் காட்டி,
பாத்தியை அழிக்கும் பாதகன் யாரடா?
எங்கள் தோட்ட எல்லா மலர்களும்,
ஈசன் முன்னே எழிலில் சமமே.
மலர்களின் வாசம் மக்களின் சொத்து,
மணப்பதும், மகிழ்வதும் மனித உரிமை.
ஏதுமறியா இந்த மலர்களைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டுமிராண்டிகள் கசக்கிட விடலாமா?
எங்கள் காவின் இயற்கை அழகை,
எவன்டா அழிக்க, இங்கே வருவது?
சிரிக்கும் எங்கள் சின்னப்பூக்களின்
அழகைப் பறிக்கும் அயோக்கியன் யாரடா?
தேவன் மலர்களைத் திருடும் கள்வனைத்
தேடியழிப்போம் திடமுடன் வாங்கடா!
மலர்களைக் காத்து மானிடம் காப்போம்,
மனிதராய் மாறி, இறங்கிடா களத்திலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை

வாழ்க்கைக் கண்ணாடி, இப்பொழுது
என் முகத்தைக் கோணலாகக் காட்டுகிறது.
கண்ணாடியில் அழுக்கு படிந்துள்ளதால்,
எல்லாமே அழுக்காகத் தெரிகிறது.
அழுக்கைத் துடைப்பதற்கு, என்
ஆத்திரம் தடுக்கிறது
கண்ணாடி எங்கும் எண்ணெய் படிந்து,
புள்ளிகள் விழுந்து விட்டன.
என் கண்ணாடி, இங்குள்ள
எல்லோருக்கும் சொந்தமாகி விட்டது.
நான் இல்லாத நேரம், என்
கண்ணாடியில் எல்லோரும் பார்க்கிறார்கள்.
முகம் பார்ப்பவர்கள் யாரும், என்
கண்ணாடியின் அழுக்கைப் பார்ப்பதில்லை.
அவர்களின் முகங்கள் கோணலாவதும்,
அவர்களுக்குத் தெரிவதில்லை.
கண்ணாடியின் சொந்தக்காரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்குத்தான்
அழுக்கும், எண்ணெய்யும் தெரிகிறது.
அதனால்தான்,
கண்ணாடியில் என் அழகைப் பார்க்க,
அதன்
அழுக்கைப் போக்கப்போகிறேன்.
அழுக்குள்ள கண்ணாடி அழுக்கையே
எப்பொழுதும், காட்டும்.
நான் அழுக்கையும் அசிங்கத்தையும்
அடியோடு வெறுப்பவன்.
எனக்கு அழகும், தூய்மையும் வேண்டும்.
என் கண்ணாடியில், என்றும்
அழகும், தூய்மையும் பளிச்சிட
நான் கண்ணாடியைக் கழுவித்
துப்பரவு செய்யப் போகிறேன்.
எனக்குப் புதுக் கண்ணாடி வேண்டாம்.
என் கண்ணாடியில்
என் முகம் அழகாகத் தெரிந்தால் போதும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய படை

சித்திரகுத்தன் சிறையில் கிடக்கிறான்.
இவன்,
பொய்யான தகவல்களைப் பிழையாகப்
புத்தகத்தில் எழுதியதால், ஒன்றுமறியா
அப்பாவி ஆத்மாக்கள் அழுகின்றன.
கட்டளையை நிறைவேற்றும் எமன்,
கடவுளின் கோபத்துக்குள்ளாகி,
வெந்துருகி நிற்கிறான்.
சித்திரகுப்தனுக்கு பந்தம் கொடுத்த,
சபிக்கப்பட்ட சாத்தான்,
இஸ்ரவேலர்களுக்கும், நசராக்களுக்கும்
தலைமைதாங்கி, பாலைவனங்களில்
போரிட்டுக் கொண்டிருக்கிறான்.
வெள்ளைப் பன்றிகளும்,
கறுத்த கடாக்களும்
கொழுத்துக் கிடக்கின்றன.
அல் அக்ஸா பள்ளியை அடியோடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிக்கப்போன கழுதை;
வாயால் மலத்தை, கக்கிக் கக்கி
செத்துக் கொண்டிருக்கிறது.
பாலஸ்தீன சிறுவர்களின் குருதியில்,
விளக்குகள் எரிவதைப் பார்த்து,
சாக்கடல் தவிக்கிறது.
மக்களுக்காக
ஏப்ரஹாம், எப்பொழுது தேவனிடம்
பிரார்த்திக்கப் போகிறாரோ?
சாக்கடலின் வேதனையைப் போக்க,
தேவதூதன் விரைவில்
உலகிற்கு வருவானா?
சிறையில் வாடும் சித்திரகுத்தனுக்கு,
பந்தம் கொடுத்த வெள்ளைப் பன்றி,
எமனைப் பார்த்து சிரிக்கிறது.
பன்றியை அழிக்க, புதிய படையொன்று
புறப்பட்டு வருகிறது, அது
புதிய புத்தகத்தில் உண்மைகளை எழுதும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எறும்புகளும் ஏணியும்

எனக்கு வானத்தில், குடியேறி
வெள்ளிகளால் மாளிகை கட்டி,
உலகத்தை ஆட்டிப் படைக்க
கொள்ளை ஆசை
என்னிடம் விமானங்கள், குண்டுகள்
ஏராளம் உண்டு.
இப்பொழுது, எனக்கு ஏணி வேண்டும்.
ஏணி செய்து தருவதாகச் சின்ன
எறும்புகள் வாக்களித்துள்ளன.
அவைகளால்தான், அயராது எனக்கு,
வேலை செய்ய முடியும்.
சாதித் துவேசம், சண்டை சச்சரவு
எதுவுமில்லாத சீவன்கள் அவைகள்.
காற்றும் என்னிடம், நேற்று
அப்படித்தான் சொன்னது.
எறும்புகள் பற்றி, யானைகளும்
யதார்த்தமாகக் கூறின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதோ! பெருமானின் சடைமுடியில்
எறும்புகள் ஊர்ந்து கொண்டிருக்கின்றன.
இனி எனக்குப் பயமில்லை.
ஈசனின் தலையில் ஊரும் எறும்புகள்,
ஏணியைத் தயாரித்து விடுவார்கள்.
இனி
பந்தம் பிடிக்க, எறும்புகளுக்கு யாரும்
சொல்லிக் கொடுக்கத் தேவையில்லை.
தேவதூதர்கள்தான் எறும்புகளின்
வழிகாட்டிகள்.
உலகத்தின் ஆட்சி இனி, எனக்குத்தான்.
என் மாளிகையில் ஏறுவதற்கு, எறும்புகள்,
ஏணியைத் தயாரிக்கட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குண்டுகள் பறக்கின்றன

நாங்கள் ஓடியாடி விளையாடிய
எங்கள் மண், அழிந்து கிடக்கிறது.
மண்டு மனைகளெல்லாம் அழிந்து,
பன்றிகளும், பாம்புகளும்
எங்கள் மண்ணைத்
தோண்டித் தோண்டிச் சீரழிக்கின்றன.
செழித்து வளர்ந்த மரங்களெல்லாம்,
பட்டமரங்களாகி விட்டன.
எங்கள் தாய் மண்ணுக்கு, இப்பொழுது
முகமில்லாமல் போய்விட்டது.
சதா, குயிலோசை கேட்ட மண்ணில்,
குரங்குகளின் சப்தமும், கள்ளக்
கோட்டான்களின் முக்கலும், முனகலும்
கேட்டுக் கொண்டிருக்கின்றன.
எங்கள் மண்ணிலிருந்த
இறையில்லங்களில்,
இப்பொழுது இறைவனில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கே மாடுகள் படுத்து,
இரவிலும் பகலிலும்,
மலம் கழிக்கின்றன.
பாவம்! மறைந்து விட்ட கடவுள்,
எங்கே ஒழித்துக் கொண்டிருக்கிறானோ?
குருமார்களிடமும், பூசாரிகளிடமும்
கேட்டால்,
இப்பொழுது, கடவுள் அரசியல்வாதிகளின்,
மாளிகைகளில்
ஒழித்திருப்பதாகக் கூறுகிறார்கள்.
அரசியல்வாதிகளின் அடிமையான
ஆண்டவன், போதையில் கிடக்கிறான்.
மாளிகைகளில் சதா கூத்தும் கும்மாளமும்
கேட்பதினால், எமன் சிரிக்கிறான்!
வேதநூல்கள் பத்தி எரிகின்றன.
எங்கள் மண்ணின் அடையாளங்களைத்
தேடித்தேடி, குண்டுகள் சதா,
பறந்து கொண்டிருக்கின்றன.
சூரியன், எங்கே இருக்கிறான்?
எங்களுக்கு எங்கள் மண்ணைக்
காட்ட வருவானா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரவாதி

கொசுக்களுக்கு என்மீது கோபம்.
அப்படித்தான் அவைகள் கூறி
ஆண்டவனைத் துதித்தன.
நானொரு சுதந்திரப்பிறவி
நிம்மதியாக நான் தூங்க வேண்டும்.
எனக்குத் தூக்கத்தைத் தந்தவன்
என்னைப் படைத்த இறைவன்தான்.
அவன் ஆணைப்படிதான்
நான் இரவில் தூங்குகின்றேன்.
என் தூக்கத்தைக் கெடுக்க
கொசுக்களுக்கு என்ன உரிமையுண்டு?
சின்னச்சிறகுகளால்
என செவிப்பறைகளை உடைக்கச்
சொன்னவன் யார்?
என் நிம்மதியையும், சுதந்திரத்தையும்
பறிக்கும்
கொசுக்களைக் கொல்வதே மேல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு கொசுக்களின் மீது கோபமில்லை.
நானொரு நேசமுள்ள மானிடன்.
பாவம்! செய்வதை வெறுப்பவன். நான்
அதனால்தான், இப்பொழுது,
இரவில், கொசுவலைக்குள் படுக்கிறேன்.
வலையில் சிக்குண்டு சாகும்,
கொசுக்களுக்கு நான் பொறுப்பில்லை.
அதற்கு பொறுப்பு படைத்தவன்தான்.
விதியின் சூத்திரதாரியும் அவன்தான்.
கொசுக்களின் விதியை,
அவனே தீர்மானிக்கட்டும்.
நான் சுதந்திரவாதி.
என் சுதந்திரம் அநியாயமாகப்
பறிக்கப்படக்கூடாது.
இறைவன் இதை உணர்ந்து,
கொசுக்களின் பிரார்த்தனையைச்
சுதந்திரமாகப் பரிசீலிக்கட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மைகள்

எங்கள் தோட்டத்துப் பூக்களில்,
தேன்குடிக்கும் சின்னக் குருவிகளுக்கு,
இம்மண்ணின் மகிமையைத் தெரியாது.
காலையிலும், மாலையிலும்
பூக்கன்றுகளுக்குத்
தண்ணீர் ஊற்றிய,
என் தாயின் வியர்வையைத் தெரியாது.
கன்றுகளுக்குச் சதா உரமிட்ட
என் தந்தையின் முயற்சி புரியாது.
பூக்களின் அழகை ரசிக்கும்
எவருக்கும், அதன் பிறப்பின்
ரகசியம் தெரியாது.
பூக்களின் மணத்தில் மயங்கும் யாருக்கும்,
அதன் உழைப்பின் உண்மை விளங்காது.
இவ்வுண்மைகள் எல்லாம்
எங்கள் மூதாதையர்களுக்குத் தெரியும்.
நீங்கள் இவ்வுண்மைகளை அறிய,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் மண்ணறைகளைத்
தேடிப்பாருங்கள்!
கள்ளிமரங்களும், காசான் பற்றைகளும்,
அடம்பன் கொடிகளும் நிறைந்துள்ள
மயானங்களில் அமைதியாகத் துயிலும்,
அந்த உழைப்பாளிகள் கூறுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலம்

காலத்தை வென்றுவிட,
என் ஆத்மா துடிக்கிறது.
சித்திரகுத்தனின் பேனையை
தேவதாசிகள் விழுங்கியதால்,
எமன் சிரிக்கிறான்.
பாரதப்போரை நடத்தும்
கண்ணன், கலங்குவதால்,
காலம் சிரிக்கிறது.
எல்லாவற்றையும் பார்த்து
ஈசன் அமைதியாக இருக்கிறான்.
காலத்தை விழுங்கும்,
என் ஆத்மாவின் துடிப்பு,
எமனோடு போரிடுவதை
எப்போது நிறுத்தப்போகிறது?
விதியின் பக்குவநிலையில்
ஆத்மா அமைதிபெறுமா?
சித்தரகுத்தன் பேனையைத் தேடித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவதாசிகளைத் துரத்துகிறான்.
பாவம்! எருமையைப்
பறிகொடுத்த எமன்,
ஈசனிடம், மண்டியிட்டுப்
புலம்பிக் கொண்டிருக்கிறான்.
காலம், கலங்காமல்
நகர்ந்து கொண்டிருக்கிறது.
உலகில் காலத்தை
வென்றவர் யார்?
இயற்கையிடம்
மனிதனுடன், கறுத்த
காகங்களும், பூனைகளும்
கேட்கின்றன.
இதன் சூட்சுமம்,
எமனின் எருமைக்குத்தான்
பூரணமாகத் தெரியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேசை

எங்கள் பெண்மையில் வடியும்
சீழ்களை நக்கும் நீங்கள்,
எங்களுக்காக இரங்கும்
பரோபகாரிகள் என்று,
பசியால் வதங்கும்
என்னுடைய குழந்தைகள் கூறுகின்றனர்.
ஆனால்,
உலகம் என்னை வேசை என்று கூறுகின்றது.
இதற்கு என் சமூகமும்
என் பிள்ளைகளின் தந்தையும்
என்னைப் படைத்த தேவனும்
பதில் கூறட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூசையும் கரடியும்

பைத்தியங்கள் சில ஒன்றாய்க்கூடி
பரமனின் கோயிலை உடைத்தன
கோயிலை உடைத்த பைத்தியங்களை
கொற்றவன் பிடித்து சிறையிலடைத்தான்.
சிறையில் கிடந்த கைதிகளோடு
சிநேகம் பூண்டன பைத்தியமெல்லாம்
அரசனைக் கொன்று ஆட்சியைப் பிடிக்க
அவசரமாகக் கூட்டம் போட்டன.
சிறையை உடைத்து வெளியில் வந்து,
சிரசில்லாத அரசன் ஆட்சியை,
அடித்து நொருக்கி அகற்றிய பின்னர்,
பைத்தியமொன்றைப் பரமனின் கோயிலில்
கடவுளாய் வைத்து கண்ணியப்படுத்த,
திட்டம் போட்டு வெற்றியும் கண்டன.
பைத்தியமொன்றை பரமனாய் வணங்கும்
புத்தியில்லாத மக்களைப் பார்த்து,
புதிராய் இருக்கும் இறைவன் சிரிக்கிறான்.
பூசையைக் கரடி செய்வதும் புதுமைதான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெறும் உலைகள்

ஆகாயம் தெரியும் எங்கள்
குடிசைகளுக்குள்
அந்தி விடிஞ்சி, அரிசியில்லா
வெறும் உலைகள்
பொங்கி வழிவதைப் பார்த்து பார்த்து
பிஞ்சு உள்ளங்கள் பசியால் அழுகின்றன.
பஞ்சம் எங்கள் பரிதாக வாழ்க்கையில்,
வஞ்சம் தீர்த்துக் கொண்டிருக்கிறது
சூம்பிப்போன, எங்கள்
முலைகளைப் பார்த்து,
சிசுக்கள் அழும்போது, எமன் சிரிக்கிறான்
கல்லாய் இருக்கும் கடவுளின் கழுத்தில்
மனித உயிர்களை மாலையாய் போட்டு
எமனும், பூசாரிகளும் பாதபூசை செய்வதில்
பக்குவமாக
இயங்கிக் கொண்டிருக்கின்றனர்.
எமனின் பூசையில், அரக்கர்கள் இருப்பதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்த மானிடம், பொங்கி எழுந்து,
அநியாயம், நடப்பதை
அறிந்தும் ஆண்டவன்
குருடனாய் இருப்பதைப்
பொறுக்க முடியாமல்,
கடவுளை உடைத்து, கோயிலை இடிக்க,
கோடரி கத்தி, கொடுவாள், சுத்தியல்
ஏந்தி வருவதை, எமனும் அரக்கரும்
பார்த்துப் பயத்தால் பாவிகளோடு, மாடக்
கோயிலை விட்டு ஓடிப்போவதால்,
அரிசி இல்லா வெறும் உலையெல்லாம்
ஆனந்தமாகக் குடில்களில் கொதிக்கின்றன.
இரவில், எங்கள் குடில்களுக்குள்ளும்
இளந்தென்றலும் இளையநிலாவும் வந்து
எங்களை வாஞ்சையுடன் அணைத்திட
வையம் சிரிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏசுபிரானை இறக்கிவிடு

இறைவா! எனக்கு
மூசா நபியின் ஆசாக் கோலைத்தா!
அநியாய ஆட்சி புரியும் அரசனையும்,
அவன் மந்திரிகள், படைகள்
எல்லோரையும் அழித்துவிட்டு, நான்
வங்கக் கடலைப் பிரித்து, என் மக்களோடு
வெளியேறப் போகிறேன்.
மன்னனை வணங்கும் மக்களையும்,
மாளிகையில் வாழும் சாத்தான்களையும்,
குருதி குடிக்கும் கொடிய பேய்களையும்
கோயில்களில் சயனிக்கும் குருக்களையும்,
பணத்திற்கு வேதமோதும் தாடிகளையும்,
தபோவனத் தலைப்பாக்களையும், கோலால்
அடித்து நொறுக்கி அழிக்கப்போகிறேன்.
மானுடம் புரியாத துவேசிகளெல்லாம்
மக்கள் சபையை ஆட்சி செய்வதா?
பேயை வணங்கும் பிர்அவ்ன் மன்னன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படையால் பாரை, வெல்ல முடியுமா?
சொந்த நாட்டில் நாங்கள் அடிமையா?
இந்தக் கொடுமை இனியும் வேண்டாம்
நாங்களென்ன ஆளுமையில்லா
அநாதைகளா?
ஆசாக் கோலைத் தந்துவிடு,
இல்லா விட்டால்,
உன்னால் வானில் உயர்த்தப்பட்ட
எங்கள் ஏசுபிரானை மீண்டும்
பிர்அவ்னின் சந்ததிகள் வாழுமிப்
பிரதேசங்களில் இறக்கி விடு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தண்டனை

**ஊ**த்தை பிடித்து, உடல்
உருக்குலைந்த சொறிநாய்போல்,
போடிமகன் வருகின்றான்
பொல்லின் துணையோடு
மாற்றி உடுக்கவொரு,
மறுசட்டை வாங்காமல், பணத்தை
மக்களுக்காய் வாழ்நாளில்
மாடாய் உழைத்தபோடி,
கஞ்சிக்கும் வழியின்றி
கலங்கித் திரிகின்றான்.
கோடிகளைச் சேர்த்துவைத்து
குழந்தைகளை வாழவைத்த
கொழுத்த பணக்காரன்
தேடுவாரற்ற தெருநாயைப் போலின்று,
படுத்துக் கிடக்கின்றான்
பாதையின் ஓரத்தில்
பெற்றபெண்கள் அத்தனைக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேர்பெற்ற மாப்பிள்ளைகள்,
பேசிமுடித்த, பெரிய பணக்காரன்
பார்ப்பதற்கும் யாருமின்றி
பாரில் தவிப்பதுமேன்?
உண்ணாமல், உடுக்காமல்,
ஒருவருக்கும் கொடுக்காமல்,
ஏழை எளியவரை,
ஏறிட்டும் பார்க்காமல்,
கஞ்சனைப் போல் வாழ்ந்த, இந்தக்
காவாலிப் போடி வாழ்க்கை
எல்லோர்க்கும் நற்பாடம்
இறையளித்த தண்டனைதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏகன் வருவானா?

அகதிகளாகவும், அநாதைகளாகவும்
ஆக்கப்பட்ட எங்களை,
இப்பொழுதெல்லாம் கொடிய
இனத்துவேசமும், சாதிவெறியும்
தாக்குவதில்லை
வானம் தெரியும் எங்கள், அழிந்த
ஓலைக் குடிசைகளுக்குள்,
தெருவில் திரியும் சொறிநாய்களும்,
வெறியில் அலையும் விசர்நாய்களும்,
பசிக்கும் போதெல்லாம் வந்து, எங்களைப்
புசித்து விட்டுப் போகின்றன.
கொடிய யுத்தத்தால், முகவரி
அழிக்கப்பட்ட எங்கள்
குடிசைகளுக்குள், இன்று
எல்லா நாய்களும் வந்து,
எங்கள் குருதிகளைக் குடித்துவிட்டு,
வழியும் அழுக்குகளையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயால் நக்கிவிட்டுப் போகின்றன.
பசியின் வேதனையில் பதறியழும், எங்கள்
பச்சிளம் பாலகர்களுக்காக,
இரவில் கனிந்து இன்பமளிக்கும் நாங்கள்,
இனத்துவேசமில்லா, மனித யந்திரங்கள்.
எங்களை வேசிகளென்று ஏசும்,
ஏகனின் சீடர்களும், தேவர்களும்
எங்கள் கண்ணீரைத் துடைத்தெறிய
முன்வரட்டும், இல்லாவிட்டால்
அவர்களும் வந்து, எங்கள் அழுக்குகளை
ஆனந்தமாக நக்கி விட்டுப் போகட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாடிகள்

அல்லாஹ்வின் இல்லங்கள்
எல்லாமே ஊரில்,
அழகான பெரிய மிடுக்கான மாடிகள்
ஒட்டறை பிடித்து ஒழுங்கற்றுக் கிடக்கின்றன
மாடிகளெல்லாம் வெளவாலின் இல்லங்கள்,
அல்லாஹ்வைத் தொழ,
ஆட்களே இல்லாமல்
பள்ளியின் மாடிகள்
எல்லாமே வெறுமைதான்.
குருட்டு வெளவால்களும்
கிழட்டுப் புறாக்களும்
குடிகொண்ட மாடிக்குள்,
மலமும் மணமுந்தான்.
அந்தி விடிஞ்சி தொழுகைக்கு அழைக்கின்ற,
அழைப்பினைக் கேட்டு புறாக்கள் பறக்கும்.
ஆனாலும், எங்களூர்
அழைப்பினைக் கேட்டு,
அல்லாஹ்வை மறந்து,
அமைதியாய்த் தூங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிக்கடி எங்களூர்ப் பள்ளிகளுக்கு
அயலூர் ஜமாஅத்தார்
வருவார்கள், போவார்கள்.
இருண்டு கிடக்கின்ற எங்களூர் ஒளிபெற,
இரவிலும் பகலிலும்
தஹ்வத் கொடுப்பார்கள்.
ஏழைக்கு வாழ்நாளில், எச்சில் எறியாத,
எங்களூர்க் கஞ்சப்
பயல்கள் எல்லோர்க்குள்ளும்
தப்லீக் ஜமாஅத் ஆட்களுக்கெல்லாம்
நல்ல நுஸ்ரத்தளிக்க போட்டியும் நடக்கும்
எங்களூர்ப்பள்ளியின்று,
கட்டியிருக்கும் மாடிகளெல்லாம்,
ஆட்கள் தொழக் காணாதென்று
ஊருக்குள் போட்டி
ஆலிம்களெல்லாம் அணியாகச்
சேர்ந்து, மாடிகள் கட்ட
ஊரில், வட்டிக்கு கொடுக்கும்
வள்ளல்கள், சீமான்கள்,
ஊதாரிகள் அத்தனை பேரையும்
அழைத்து ஒன்றாய்,
உண்டியல் குலுக்கி ஊருக்குள் வருவதை,
சொல்லாமல் வந்த
சுனாமியால் வாழ்க்கையில்,
மண்டுமனைகள், மக்கள் உடைமைகள்,
எல்லாமே இழந்து ஏழையாய்த் தெருக்களில்
ஏங்கித் தவிக்கும் எல்லோரும் பார்த்து,
உள்ளம் உருகி, ஊமையாய் நிற்பதை,
அல்லாஹ் அறிவான், ஆலிம்கள் அறிவாரா?

நுஸ்றத் - அன்பளிப்பாகக் கொடுக்கும் உணவு
தஹ்வத் - இஸ்லாமிய விளக்கம் / அறிவு
ஜமாஅத் - உண்மைக்காய் உழைப்பவர்கள் / கூட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்குலாப்

கவிஞர். எஸ். முத்துமீரான் மரபு
யாப்பிலிருந்து விடுபட முயல்வதும்
இத்தொகுப்பின் ஊடாகத் தெரிகிறது.
புதுக்கவிதை, மரபு யாப்பில் இருந்து
விடுபட்டதற்கு முதன்மையான காரணம்
பிசிறில்லாத அசலான கவிதையைக்
கண்டடைவதுதான்.
மரபு பற்றிய புரிதலோடு
புதுக்கவிதைக்குள் நுழையும் போது
மரபின் உறுத்தலான
கூறுகளைத் தவிர்க்க முடியும்.
முத்துமீரானின் சிறப்பு நாட்டுப்புற மரபு
சார்ந்து மட்டக்களப்புத் தமிழில்
இயங்குவது.

PRICE Rs. 250.00

978-81-903665-2-6

நேர் நிரை
வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org